புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஞூ ஜூன்மீ 6வ [ந. 98

பிரஸங்கம் XCVIII.

## ஹிட்லரின் துக்காந்திக நாடகம்.

(ஜேம்ஸ் லாங்டேல் ஹாட்க்ஸன் பி. பி. ஸி. யில் பேசியது).

இவ்வாரத்தில் பிரிடனில் முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்த யுத்தமாகிற நாடகத்தின் மூன்றுவது அங்கம் ஆரம்பமாகியிருக்கிறதென்றே சொல்லலாம். இந்நாடகத்திற்கு முக்கிய ஆசிரியர் மிஸ்ட்டர் ஹிட்லர்தான். இதற்கு மற்றுமொரு அங்கம் இருக்கிறதாவென்பதைத் தற்போது சொல்ல இயலாது. இந்த மூன்றுவது அங்கத்தின் முடிவிலேயே கதையே முடிந்தாலும் முடியலாம். சுருக்கமாக அதன் அமைப்பைக் கவனிப்போம்.

### ஹிட்லர் சொன்னது என்ன.

இந்நாடகத்தின் ஆசிரியரான மிஸ்ட்டர் ஹிட்லர் இன்னும் இந்த யுத்தம் நீடித்திருக்குமென்கிறுர். தனக்கு உதவியாக இருக்கிறவர்களையும், அப்படியிருந்தும் நிலைமை சரியாக இல்லாதவர்களையும் பார்த்து இன்னுமொரு மாரிகாலம்வரை சண்டை நீடித்திருக்குமென்றும், இன்னும் இந்த யுத்தத் தொந்தரவு அதிகம் ஏற்படுமென்றும் சொல்லி வருகிறுன். அவனுடைய பயமுறுத்தல்களும் பேச்சும் நமக்குத் தெரிந்ததுதான். நாம் அவைகளுக்குப் பழக்கமடைந்திருக்கிறோம். நமக்கு அவை ஆச்சரியத்தையே விளைவிக்கா. அவனுடைய ஆள் ஒருவன் பிப்ரவரி மாதத்தில் பேசும்போது பிரிடனைத் தாக்குவதால் பிரயோஜனமில்லை; அவ்விஷயத்தில் அதிக குண்டுகளை செழவழிக்கமாட்டோமென்றுன். மேலும் ஜெர்மன் நகரங்களைப் பிரிடிஷார் தாக்கினுலும் பிரிடன்பேரில் ஜெர்மனி குண்டு வீசாது என்றும் சொன்னுன். இது மூன்று மாதங்களுக்கு முன்பு ஆனுல் தற்சமயத்தில் பிரிடனிலுள்ள பெரிய கட்டடங்களின் ஸன்னிவேசத்தைக் குறிக்கச்சொல்லியிருக்கிறுன். பாம்பர்களை அனுப்பி அவைகளைத் தாக்குவதே தான் நோக்கம்.

### ஹிட்லர் செய்தது என்ன.

ஹிட்லரின் பொதுவான கொள்கைகளைப்பற்றி நமக்கெல்லோருக்கும் தெரிந்ததுதான். அதாவது ஒரு கோவிலையோ, அழகிய கட்டடத்தையோ, ஆஸ்பத்திரியையோ இடித்துத் தள்ளினுல் ஒரு சாதகமேற்படுமென்று நினைத்தால் அவ்விதம் செய்யத் தயங்கவேமாட்டான். இத்தகைய நாஸிக் கொள்கை எவ்வளவோ நாட்களுக்கு முன்பு நமக்குத் தெரியுமாதலால் சமீபத்தில் பாத் நகரத்தைத் தாக்கிய போது நாம் ஆச்சரியப்படவில்லை. இதைத்தான் லாண்டார்

கவி கரிந்து (Corinth) நகருக்கு சமமாகச் சொல்லியுள்ளார். யார்க், நார்விச் போன்ற நகரங்களையும் தாக்கியுள்ளான். லூபெக், ராஸ்டக் முதலிய நகரங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கியதால் பதிலுக்கு பதிலாக இந்நகரங்கள் தாக்கப்பட்டிருப்பதாகவும் எதிரி சொல்லிக்கொள்ளுகிறான். மனிதர்கள் காட்டுமிராண்டித்தனத்திலிருந்து மாறி நாகரீகமடைந்திருக்குமின்னாளில் பாத் நகரிலுள்ள கோவிலையோ, இன்னும் இதர ஞாபகச் சின்னங்களையோ அழித்து வருவதில் ஒரு குற்றமும் இல்லையாம். ஆனால் ஜெர்மன் ஹீன்கல் விமானத் தொழிற்சாலையையோ, மியூனிச்சிற்கு அருகில் நீர்மூழ்கிகள் கட்டப்படும் ஆக்ஸ்பர்க் நகரையோ நாம் தாக்கக் கூடாதாம்.

### பிரிடன் பொருத்துக்கொள்ளும்.

ஆகவே மற்ற விஷயங்களைப் பற்றி அவன் தப்பான அபிப்பிராயம் கொடுப்பது போல இவ்விஷயத்திலும் அவன் சொல்லுவது சரியல்ல. பாத், யார்க், நார்விச் முதலிய நகரங்கள் பாழாவதை நாம் விரும்பமுடியாது. காமன்ஸ் சபை, வெஸ்டுமினிஸ்ட்டர் அபி, பக்கிங்ஹாம் அரண்மனை முதலியவைகள் அழிவதோ, தொழிலாளர் அதிகம் வசிக்கும் லண்டன் நகரின் கிழக்கு பாகம் கெட்டுப் போவதோ நமக்குத் திருப்தியைக் கொடுக்கா. இவ்விதம் காட்டுமிராண்டிகள்தான் செய்து வருவார்கள். ஹிட்லர்தான் இந்தச் செய்கைகளை மிக மிக நேர்த்தியாகச் செய்துவருகிறான். 1940-ம் வருஷம் மாரிகாலத்தில் ஜெர்மன் விமானங்கள் 20,50,80 கணக்கில் வந்து இங்கிலாந்தில் குண்டுகளை வீசியபோது நமக்கு அவைகளைப்பற்றிய அனுபவங்கள் கிடைத்தன. ஒரு சமயத்தில் லண்டனில் ஏராள நெருப்புகள் எரிந்து கொண்டேயிருந்தன. அப்போதெல்லாம் நாம் சமாளித்துத்தான் வந்தோம். கஷ்டங்களையெல்லாம் சிரமத்துடனேதான் பொருத்துக்கொண்டோம். ஆகவே எதிரிகளின் எண்ணம் பலிக்காதுபோயிற்று. வாடகை மோட்டார்கள் போய்க்கொண்டு தானிருந்தது. தாமதித்து வெடிக்கும் குண்டுகள் ஆங்காங்கு சப்தித்துக்கொண்டிருக்கும். குண்டுகள் விழுந்த ஆஸ்பத்திரிகளிலிருந்து குழந்தைகளை நர்ஸ்கள் தூக்கிக்கொண்டு சென்றார்கள். "உங்களுக்கு வெளிச்சத்தைக் காண்பிக்கிறோமென்றும் சொல்லுவார்கள்." வெஸ்டு எண்டு தெருவு பாதி எரிந்து பாழான போதிலும் அங்குள்ளவர்கள் இன்னும் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் வேறு இடங்களுக்குச் செல்லுவோமென்பார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் இறக்கும் போதும் அங்குள்ளவர்களுக்கு இவ்வித உணர்ச்சியிருந்தது. பொதுமக்கள் ஆடையை சிப்பாய்கள் அணிந்து கொள்ளுவார்கள். இதையெல்லாம் பார்த்துவிட்டு எதிரி படையெடுப்பு செய்வதை நிறுத்தி விட்டான். ஏதோ தயவு வந்து நிறுத்தவில்லை, தனது லக்ஷியம் கைகூடாததாலேயேதான் மீண்டும் படையெடுப்புச் செய்யவில்லை. மேலும் ருஷ்யர்களுடன் சண்டை செய்யவேண்டியும் எதிரிக்கு நிர்ப்பந்தம் வந்தது. தற்சமயத்தில் மறுபடியும் 11 மாதம் கிரமித்து மறுபடியும் ஆரம்பித்திருக்கின்றான்.

தற்சமயத்தில் லண்டனிலிருப்போரும் 18-மாதங்களுக்கு முன்பு நடந்து கொண்ட மாதிரியே இருந்து வருகின்றனர். அழகிய பாத் நகரம் முன்போலக் காணப்படவில்லை. இரண்டு ஜார்ஜ் பிறைச்சந்திர வட்டங்கள் காணப்படவில்லை. சரிகைமாலை சாக்கடையில் கிடப்பது மாதிரி அந்நகரம் இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. குண்டுகள் விழுந்ததற்கு அடுத்த நாளே முடக்கு வியாதியுள்ள 25 ஸ்திரீகளும், பெண்களும் தண்ணீர் அறைக்கு வந்து தண்ணீர் குடிக்க வந்தனர். அங்கிருக்கும் பூந்தோட்டத்தில் படுத்திருந்தவர்கள் படுக்கைத் துணிகளைக் கூடாரங்களாகச் செய்துகொண்டனர். கட்டடங்களின் அழகிய மாடிப்படிகள் சில இடங்களில் இடிந்து போயின. "ரோம பாத் நகரினுள் போகும்வழி" என்று எழுதப் பட்டிருந்த இடத்தில் தற்சமயம் 'நீங்கள் இங்கே தங்கியிருக்கலாம், சூடான சாப்பாடு ஒரு ஷில்லிங்' என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஸன்னிவேசம் மாறியிருக்கிறதே தவிர அமைதி குறையவில்லை.

லண்டன், கவன்டிரி, ஷெப்பீல்டு, நார்விச், யார்க், முதலிய எல்லா பட்டணங்களிலும் ஜனங்களுக்கு தைரியம் ஒரே மாதிரியாக இருக்கிறது. நார்விச்சிலிருந்து வெளியே சென்ற வயது சென்றவர்களெல்லாம் மறுபடி திரும்பி வருவோமென்று

சொன்னார்கள். அங்கே அச்சிடப்படும் காலைப்பத்திரிகைகளில் 'காட்டுமிராண்டிகளைப் போல் நாமும் நடந்துகொண்டு பிரதி செய்யமுடியாது. நார்விச்சிலுள்ள மாதாகோவிலை எதிரி நாசப் படுத்தியதற்காக கோலோன் வாசிகளைத் தாக்குவது தர்மமாகாது' என்று அச்சிடப்பட்டிருந்தது. இதுவே இங்கிலீஷ்காரரின் மனப் பான்மையாகும். மேலும் அப்பத்திரிகை கூறுவதென்னவென்றால் இம்மாதிரி எதிரி செய்யும் கொடிய செய்கைகளைப் பார்த்துவிட்டு அவனைக் கூடிய சிக்கிரம் ஒழிக்கவேண்டுமென்றுதான். ஹிட்லரின் நடத்தையைப்பற்றி மான்ஸெஸ்டர் கார்டியன் பத்திரிகை அபிப்பிராயம் சொல்லும் போது 'உருக்கமும், பிரியமும் ராணுவத்திலுள்ளோரின் மனதிற்குப் படா' என்று சொல்லப்பட்டிருந்தது. ஜெர்மன் தொழிற்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்தளங்கள் முதலியவைகளைத் தாக்குவதென்பதை நாம் வெகு நாளாகக் கையாண்டுவருகிறோம். நமது கட்டடங்களைத் தாக்கியதாலும், ஹிட்லர் ஏதோ உளறினாலும் நாம் கொஞ்சமும் பின்வாங்கமாட்டோம். இப்போதுதான் நம்முடைய தாக்குதலின் தன்மையை எதிரி நாட்டிலுள்ளோர் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

## 'ஒன்றையும் அலக்ஷியம் செய்யாதே'.

ஆலிவர் கிராம்வெல் என்பவர் 'ஒன்றையும் அலக்ஷியம் செய்யாதே' என்று சொல்லுவார். அதை நாங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறோம். முன்பு லண்டன்மேல் குண்டுகள் விழுந்தபோதுள்ள நிலைமை தற்போது இல்லை. நமது விமானங்களும், குண்டுகளும் முன்னைவிட அதிகமாக பலம் பெற்றிருக்கின்றன. ருஷ்யப் போர் முனைக்கு எதிரி சாமான் ஸப்ளைகளைப் பெரும் துறைமுகப் பட்டணமான லூபெக்கை நாம் தாக்கியதுபோல் இங்கிலாந்தில் ஒரு நகரம் கூட தாக்கப்படவில்லை. ஸ்டர்லிங், லங்காஸ்டர், மான்செஸ்ட்டர், ஹாலிபாக்ஸ் முதலிய விமானங்கள் மிகப் பெரியவை. ஜெர்மனி ஏற்றிவந்த பளுவைக் காட்டிலும் அதிக பாரம் ஏற்றிச்செல்லவும் முடியும். ஜெர்மன் ஹீன்கல் விமானங்கள் ஏற்றிவந்ததைக் காட்டிலும் இரண்டு மூன்று மடங்கு அதிகமான குண்டுகளை ஒவ்வொரு விமானமும் ஏற்றிக்கொண்டு செல்லும். ஜெர்மனி இன்னும் அதிகப் பெரிய விமானங்களைக் கட்டி வருவது உண்மையாக இருக்கலாம். அதைத் தடுக்கவே ராஸ்டக் நகரம் தாக்கப்பட்டது. ஒரு வாரத்தில் நான்கு தடவை தாக்கப்பட்டது. ஏப்ரல்மீ 23உலிருந்து 29உ வரைக்கும் பிரிடனில் விழுந்த ஒரு டன் குண்டுக்கு ஆறு டன் குண்டு வீதம் ஜெர்மனியில் போடப்பட்டிருக்கிறது. இதைக் கண்டுதான் ஹிட்லர் கத்துகிறான். தான் செய்ததற்குத் தகுந்த விதமாகவே எதிரி அனுபவித்து வருகிறான். நம்மால், செய்யப்படும் படையெடுப்புகள் கொஞ்சமும் குறையா.

## மூன்றாவது அங்கம்.

நம்முடைய தாக்குதலைக் கண்டு எதிரி கலங்கிப் போயிருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. ருஷ்யாவை ஒரு விதமாக முடிக்கும் வரை அங்கேயேதான் இருக்கப் போவதாக ஹிட்லர் சொன்னது யாவருக்கும் ஞாபகமிருக்கலாம். மேலும் யாவரையும் தண்டிப்பதற்கான அதிகாரம் தனக்கு இருப்பதாகவும் சொல்லிக் கொண்டான். இந்த அதிகாரம் எப்போதும்தான் அவனுக்கு இருக்கிறது. புதிதாகக் கேட்பதின் தாத்பர்யம் என்னமோ இதெல்லாம் தான் அவன் கொண்டு வரப்போகும் சமாதானம். அவன் செய்யும் குற்றங்களைப்பற்றி யாருக்குத் தான்தெரியாது. ஜெர்மனி பேரில் குண்டுகள் விழாது என்று அவன் சொன்னதற்கு மாறாக பிரமாதமாக குண்டுகள் விழுந்து கொண்டிருக்கின்றன. உதவிப் படைகள் வேண்டுமென்று முஸோலினிக்குச் சொல்லியனுப்புகிறான். அப்படி அதற்கு இணங்கிவரும் இதாலியப் படைகள் லிபியாவில் சண்டை செய்யும் போது ஜெர்மானியர் பேரில் உள்ள வெறுப்பைத் தெரியப்படுத்துகின்றன. ஆகவே ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் பரஸ்பரம் ஒரு அமைதியும் ஏற்படவில்லை. ஜெர்மன் ரகசியப் போலீஸார் வியாபித்துக்கொண்ட இதாலிக்கு முஸோலினி பேருக்கு தலைவனாக இருக்கிறான்.

இவ்விதம் ஆரம்பமான மூன்றாவது வருஷ யுத்தத்தைப்பற்றி ஹிட்லருக்கு திருப்தி ஏற்பட்டிருக்க முடியாது. அவனுடைய சக்திக்கு மீறி விஷயங்கள் நடக்கின்றன. லூபெக், ராஸ்டக், கோலோன், டிராண்ட்ஹீம்,

ஹாம்பர்க், ரூர், கீல் முதலிய பட்டணங்களில் நடந்த பிரிடிஷ் தாக்குதல்கள் அவனுடைய மனதைத் தளரச்செய்கின்றன. இனிமேல் எதிரிக்கு வெற்றி ஆகாசத்திலிருந்து தான் குதிக்கவேண்டும். அதற்குப் பதிலாக நமது குண்டுகள்தான் விழுகின்றன.

### முடிவில் பரதவாக்யத்தை ஹிட்லர் கூற முடியாது.

ஸ்டர்லிங், விட்லி, வெல்லிங்டன், ஹாம்டன், மான்செஸ்டர், போஸ்டன், லங்காஸ்டர் போன்ற விமானங்களைப்பற்றி கவிபாடுவதற்கு கிப்ளிங் போன்ற கவிகள் இருந்தால் நலம். இல்லாவிட்டாலும் பாதகமில்லை. இவ்விமானங்களே இரவில் பல்லாயிரம் மைல் தூரம் கடந்து எதிரி நாட்டில் குண்டுகளைப் போடும் போது ஏற்படும் சப்தமே போதுமானது, "நீங்கள் தான் நாங்கள் உண்டான தற்குக் காரணம். நீங்களே நாங்கள் உண்டான பிரயோஜனத்தையடையுங்கள்" என்று எதிரிகளைப்பார்த்து சொல்லுவதுபோல் இருக்கும். ஹிட்லரின் வீர வார்த்தைகளை இவ்விமானங்களின் சப்தம் அடக்கிவிடும். இந்தயுத்தம் முடிந்ததும் ஹிட்லர் கடைசியாக மிஞ்சியிருந்து சமாதானத்தை வழங்கமுடியாது. நாம் தான் செய்வோம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 30—5—42-லிருந்து 5—6—42-வரை.

**லிபியா**—யுத்தம் மறுபடியும் ஆரம்பமாகியிருக்கிறது. பல மாதங்களுக்குப் பிறகு இப்போது அங்கே கடும் யுத்தம் நடக்கிறது.

மேமீ 26வ ஜெனரல் ரோமல், அதிக எண்ணிக்கையும், பூர்ண முஸ்தீப்பும், பெரும் விமானப் படையும் பிரயோகித்து முன்னேறிப் போர் நடத்துவதாகப் பெருமையாகச் சொல்லிக்கொண்டான். எதிரி வசமிருந்து கிடைத்த தஸ்தாவேஜுகளிலிருந்து டொப்ருக்கைப் பிடிப்பதுதான் லக்ஷியமாகத் தெரிகிறது. ஆனால் முதலில் பிர்ஹகீமைப் பிடிப்பதும், இரண்டாவதாக பிர்ஹகீமை வளைத்துக்கொண்டு, மூன்றாவதாக கஸாலா-கபூஸோ கடற்கரையைப் பிடிப்பதும் எதிரி நோக்கங்களாகத் தெரிகிறது. பிர்ஹகீமைப் பிடிக்க முயன்ற இதாலியப் படை திருப்பி யடிக்கப்பட்டது.

இரண்டாவதான திட்டப்படி பிர்ஹகீமைச் சுற்றிக்கொண்டு மே 26—27 இரவில் எதிரி வந்தும் அக்ரோமா, எல்டேடா, ஸிடிரெஸெக் முதலிய பட்டணங்களை நோக்கிப் போய்விட்டான். சில எதிரி டாங்கிகள் கடற்கரை ரஸ்தாவை யடைந்தன. அங்கேயே இறங்கவும் எதிரி முயன்றான். ஆனால் தரையில் நமது யந்திரப் படைகளாலும், கடலில் நமது கப்பற்படையாலும் துரத்தியடிக்கப் பட்டான்.

மே 27 தனது மூன்றாவது திட்டத்தை பயன்படுத்த நினைத்தான். 28, 29, 30, மூன்று தினங்களிலும் கடும் யுத்தம் வடக்கே அக்ரோமா முதல் தெற்கே பிர்ஹகீம்வரையிலும், கிழக்கே எல்அடம் முதல் மேற்கே பிரிடிஷ் சுரங்க தளங்கள் வரையிலும் உள்ள பிரதேசத்தில் நடந்தது.

ஸப்ளைகளைப் பெராததாலும், நம்மால் துரத்தி யடிக்கப்பட்டும் கபுஸோ ரஸ்தாவிலும் அதற்குத் தெற்கே 10 மைல் தூரத்திலும் பிளந்துகொண்டு ஓடினான். அப்போதும் அவனுக்கு அதிகத் தடையுண்டாக்கப்பட்டது. இருந்தாலும் மே 31வ சில டாங்கிகளையும், ஸப்ளைகளையும் 20 மைல் மேற்கே கொண்டு வந்திருக்கிறான். இன்னும் ஏராள படைகள் பின்னுடியே நின்றுவிட்டன. ஆகவே ஒன்று தப்பி எங்கேயாவது ஓடலாம் அல்லது அப்படியே அழியவேண்டியது தான். மிஸ்டர் சர்ச்சில் சொல்லும் விதமாக சண்டை இன்னும் முடியவில்லை,

'இருந்தாலும் முன்னேறிப் போர் நடத்துவதான ரோமலின் திட்டம் முறிந்தது. எதிரிக்கு ஏராள சாமான்களும் மனிதர்களும் நஷ்டம்' ரோமலின் எண்ணம் நடக்காமல் செய்யப்பட்டது. அவன் நடத்துவதாயிருந்த சண்டையும் தடைபட்டுவிட்டது.

கஸலா அணிவகுப்பு ஓரமான நேசதேச அரங்கப் பிரதேசங்களில் மீண்டும் ரோமல் தாக்கினான். ரோடுன்டாஸெகுலியிலிருந்து பிரிடிஷ் படைகள் அவனது ஸப்ளைகளைத் தடுத்து வருகின்றன.

**சைனா.**—கின்ஹ்வா (Kinhwa) மே 30வ காலி செய்யப்பட்டது. அன்சிப்பைத் தாக்கி, ஷோசுங், லூங்கியா இரண்டையும் பிடித்திருக்கிறான். பிங்யான்ஷான் (Pingyanshan) என்ற இடத்தில் கடும் சண்டை நடக்கிறது. ஸுசாங், ஷென்க்ஷீன், யூங்கியாங இவைகளை சீனர்கள் பிடித்து ஹுபே மாகாணத்தில் இசாங்கையும் தாக்கியுள்ளனர். யூனான் மாகாணத்தில் ஸால்வினை சீனர்கள் கடந்து டெங்சுங், லுங்லிங் இரண்டையும் சூழ்ந்துகொண்டு மிம்சாங்கயல் நகரையும் திரும்பப் பிடித்தனர்.

ஜூன்மீ 1வ சயாங்கெய் ஷெக் ஒலிபரப்பும்போது அமெரிக்காவின் 10 சதவிகிதம் உதவியைக்கொண்டு பூர்ணமாக சீனப்படைகள் சண்டைசெய்யும் என்றார்.

குத்தகைக் கடன் திட்டப்படி சைனாவிற்கு அதிகச் சாமான்களையனுப்ப செவ்வாய்க்கிழமை அமெரிக்காவில் ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது. இனிமேல் சைனா அதிகமாகச் சண்டை செய்யமுடியும்.

மிஸ்ட்டர் அட்லி அரசாங்கத்தாரின் சார்பாகப் பேசுகையில் சைனாவிற்கு எல்லாவித உதவியும் கொடுக்கப்படுமென்றார்.

**சூஹ்ஸீனும் டச்சுத் துறைமுகமும்.**—கின்ஹ்வாவிற்கு 50 மைல் மேற்கிலுள்ள சூஹ்ஸின் விமான தளத்தையும், அலூஷியனில் அமெரிக்க தளமாயிருந்த டச்சுத் துறைமுகத்தையும் ஜப்பானியர் தாக்கினர். ஏழு வாரங்களுக்கு முன் டோகியோவைத் தாக்கியதற்குப் பிரதியாக இருக்கலாம். டோகியோவைத் தாக்கும்போது அமெரிக்க விமானங்கள் இங்கிருந்து பறந்து சூஹ்ஸீனில் இறங்கியிருந்திருக்கலாம்.

**தென்மேற்கு பஸிபிக்.**—மார்ஸிபியை எதிரி தாக்கினான். இருந்தாலும் ரபால், லே, ஸலாமூவா, ஸாலமன், டில்லி (Dilli), ஹுட்டோ முதலியவைகளை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின, பெரிய ஜப்பானியக் க்ரூஸரையும், மற்றும் இரண்டு கப்பல்களையும் அமெரிக்கா நீர்மூழ்கிகள் மூழ்கடித்தன. ஸிட்னியில் செய்த அரைகுறைத் தாக்குதலில் எதிரி மூன்று நீர்மூழ்கிகளை இழந்தான். நேசநாடுகளுக்கு நஷ்டம் விசேஷமாக ஒன்றுமில்லை.

ஜூன்மீ 1வ ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி 'அளவு கடந்து ஜப்பான் தெற்கு நோக்கி பாய்ந்திருக்கிறது. முன்னேறித் தாக்கும் போர் அவ்வளவு கடுமையாக செய்யப்படவில்லை. அதன் ஆக்கிரமணமும் நின்றுவிட்டது'.

**பர்மா.**—வடக்கு, தெற்கு பர்மாவில் பிரிடிஷ் விமானத் தாக்குதல் நேர்ந்தது. ரெங்கூன், மெயிட்கியினா, கலிவா அக்யாப் முக்கியமாத் தாக்கப்பட்டன.

**இந்தியா.**—மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர் இந்தியாமீது ஏற்படக்கூடிய படையெடுப்பைப் பற்றி ஜூன்மீ 1வ பேசுகையில் பின் கண்ட விதமாகச் சொன்னார்:—'ஆறு வாரங்களுக்கு முன் ஆபத்து உண்மையிலிருந்ததுதான். ஆனால் நாம் எதிர்பார்த்தபடி ஜப்பானியர் தாக்கவில்லை. அப்பவும், வடஇந்தியாவையா, தென்னிந்தியாவையா, ஸிலோனையா தாக்குவார்களென்று சொல்ல முடியவில்லை. தற்சமயத்தில் பாது காப்பு முறைகள் எங்கும் பலமாக இருக்கின்றன. விமானங்களும் தளவாடங்களும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இந்திய கப்பற்படை பலப்படுத்தப்பட்டிருக்கிறது. கடற்கரை நகரங்களின்மீது எதிரி விமானத் தாக்குதல் நேரக்கூடிய ஆபத்துமிருந்தது. ஆகவே ஜனங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.'

**ருஷ்யா.**—இரியம் (Irium)ஐச் சுற்றி சண்டை வலுத்திருக்கிறது. கார்கவ் விற்கு அருகில் ஜெர்மன் முன்னேற்றம் பலிக்கவில்லை. மேமீ 29உ டானெட்ஸ் நதியைக் கடக்கச் செய்த எதிரி முயற்சி பலிக்கவில்லை. கார்கவ்விற்கு அருகில் மூன்று ருஷ்யப் படைகளைச் சூழ்ந்துகொண்டதாகக் கூறும் ஜெர்மன் செய்தி பொய்யானது. 2,000 மைல் போர் முனையில் இன்னும் டிமோஷென் கோ முன் னேற்றப் போர் நடத்தும் நிலையிலிருக்கிறார்.

**பெரும்வகை தாக்குதல்கள்.**—கோலோன், எஸ்ஸன், மேமீ 28உ கிழக்கு பிரஷ்யாவிலும், மேமீ 29உ நோம்—ரோன் தொழிற்சாலைமீதும், டச்சுக் கடற் கரைக்கு அருகில் ஒரு எதிரித் துணைக்கப்பல் கூட்டமும், வட பிரான்ஸும், தாக்கப்பட்டன. 30உ 1,000 பிரிடிஷ் விமானங்கள் $1\frac{1}{2}$ மணி தேசகாலம் கோலோன் நகரின்மீது பெரும்வகைத் தாக்குதலைச் செய்தன. 3,000 டன் குண்டுகள் போடப்பட்டன. 20,000 பேர் இறந்தனர், 54,000 பேர் காயம் அடைந்தனர். ஜுன்மீ 1உ எஸ்ஸன்மீது 1,036 பிரிடிஷ் விமானங்கள் தாக்கின ஏராள நஷ்டம் விமான நிபுணர்களின் அபிப்பிராயப்படி 'இத்தாக்குதல்கள் அடுத்துவரும் மாதங்களில் யுத்தத்தில் பெரும் மாறுதலைச் செய்யும்'.

ஒவ்வொரு நகரமும் இம்மாதிரி தாக்கப்படுமென்ற சர்ச்சிலின் உறுதிமொழி யின்படி இம்மாதிரி செய்யப்பட்டது. விமான மந்திரி ஸர் ஆர்ச்பால்டு ஸின் கிளேர் அபிப்பிராயப்படி "இன்னும் தாக்குதல்கள் பிரமாதமாக இருக்கும்." மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபை முன்பாக ஜுன் 2உ பின்கண்ட விதமாகச் சொல்லியிருக்கிறார்.

"இதேவிதமாக இனி செய்யப்படும் தாக்குதல்களும் இருக்குமென்று சொல்ல முடியாது. சமயத்திற்கேற்றவாறு தந்திரங்கள் மாற்றப்படும்.

"மேலும், இந்த தாக்குதல்கள் பிரிடிஷ் முன்னேற்றப்போரின் தன்மையைத் தெரியப்படுத்துகின்றன. அமெரிக்க விமானப்படை நம்முடன் சேர்ந்துகொண் டதும் இன்னும் அதிகமாகவே தாக்குதல் செய்யப்படும்.

"உண்மையில் இவ்வருஷத்தில் ஜெர்மன் நகரங்களும் துறைமுகங்களும், யுத்த தளவாட தொழிற்சாலைகளும் தாங்கமுடியாத விதமாகத் தாக்கப்படும்."

இவை வீண் வார்த்தைகளல்ல. சனிக்கிழமை கோலோனில் கிளம்பிய தீ திங்கள்வரை எரிந்துகொண்டிருந்தது. விமானப் படையெடுப்புப் பாதுகாப்பு கோஷ்டியை நாஸிகள் ஆரம்பித்திருக்கின்றனர் பயந்தாங்குள்ளித் தனமாக காண்டர்பரி நகரின் மீது நாஸித் தாக்குதலும் செய்யப்பட்டது. அங்கே காட்டு மிராண்டித்தனமானத் தாக்குதல் ஏற்பட்டும் சேதம் குறைவுதான்.

**கிரீஸ்.**—நாஸிக் கொள்ளையின் பயனாக பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக் கரின் ரகசிய விபரங்களின் படி ஏராளப்பேர் இருக்கின்றனர். ஏதென்ஸிலும் பிரகூஸிலும் 1,000 பேர் தினம் இறந்தனர். பால் முதலிய தினசரி சாமான் களெல்லாம் ஜெர்மனிக்கு ஏற்றப்படுகின்றன.

**பல்கேரியா-ஹங்கேரி-ருமேனியா.**—இவைகள் மீது சண்டை தொடரவேண்டு மென்று ஜனாதிபதி ரூஸ்வெல்டு சொல்லியுள்ளார்.

"இந்நாடுகளின் அரசாங்கங்கள் அமெரிக்காமீது சண்டை தொடுத்திருக்கின் றன. இவையாவும் தாங்களாகச் செய்யவில்லை. ஹிட்லரின் தூண்டுதலின் பேரில் தான் செய்திருக்கின்றன.

"நேசநாட்டு திட்டங்களுக்கு விரோதமாக இவைகள் ராணுவ நடமாட்டங் களும் செய்து வருகின்றன," என்றார்.

**கப்பல்.**—மே 25உ முதல் 30உ வரை நூற்றுக் கணக்கான அச்சு நாட்டு விமானங்களால் தாக்கப்பட்ட பிரிடிஷ் துணைக்கப்பல் கூட்டம் ஒன்று பத்திரமாக வடக்கு ருஷ்யத் துறைமுகத்தையடைந்தது. இதில் 18 கப்பல்களை மூழ்கடித்த தாகச் சொல்லும் அச்சுநாட்டுச் செய்தி முழுப் பொய்யானது.

**பலவகைப் பட்டவை.**—ஆக்கிரமித்த நாடுகளில் ஜெர்மன் ரகசியப் போலீஸ் தலைவனாயிருந்த ஹீட்ரிச் இறந்தான்.

# சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **25—5—42** (திங்கட்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்லீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **விமான நிலயம்.**—டிமிமி (Tmimi). | | | |
| போக்குவரத்து வண்டிகள்.—மாரா (Marau) பிரதேசத்தில். | | | |
| விரோதி விமானமிறங்குமிடங்கள்.—மார்டுபா (Martuba). | | | |
| மோட்டார் போக்குவரத்து.— டெர்ணு (Derna)வுக்கும், பாம்பா (Bomba) வுக்கும் இடையேயுள்ள ரஸ்தாவில். | | | |
| **ஸிஸிலி (Sicily)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமானமிறங்குமிடம்.—மெஸீனு (Messina). | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| **விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.**—போரரங்கம் முழுவதிலும். | | 8 விமானங்கள். | 11 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு–நியூ பிரிடன் (New Britain)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| வெங்கனு (Venkanau) விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—ராபால் (Rabaul). | | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—நியூகினி (Newguinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—லே (Lae). | | 1 விமானம். | 2 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு–பர்மா (Burma)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| படகுகள்.—சிண்டுவின் (Chindwin) நதியில். | | | |
| **26—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—**விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய்** (English Channel), வட பிரான்ஸ் (France). | வெடிகண்ணி ஒதுக்கும் கப்பல் தீப் பற்றியது. | 1 விமானம். | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **விமான நிலயம்.**—டிமிமி (Tmimi). | | | |
| **விமானமிறங்கும் இடம்.**—மார்டுபா (Martuba). | | | |
| **துறைமுகம்.**—பெங்காஸி (Benghazi). | | | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **26—5—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும். | | 23 விமானங்கள். | 82 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமானப்போர்.—நியூகினி (New Guinea)யில். | | 1 விமானம். | 3 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| ஸ்ப்ளை, போக்குவரத்து ஸ்தலங்கள்.—பர்மா-யூனன் (Burma-Yunnan) எல்லைப்புறம் எங்கும். | | | |
| **27—5—42.** (புதன்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| இரவில்.—வெடிகண்ணிகள் போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி யந்திர சாதனப்படைகள்.—பிர்ஹாக்ஹீம் (Birhakheim) எலாடம் (El adem) பிரதேசங்களில். | | | |
| விமான நிலயம்.—டிமிமி (Tmimi). | | | |
| விமானச் சண்டைகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| **ஸிஸிலி (Sicily)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—மெஸீனு (Messina) கடேனியா (Catania). | | | |
| துறைமுகம்.—அகஸ்டா (Augusta). | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.— போர்முனை முழுவதிலும். | | 13 விமானங்கள். | 60 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| விமான நிலயங்கள், கட்டடங்கள்.—லே (Lae). | | | |
| வேவு பார்த்தல்.-ஸலாமா (Salamaua). | | | |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| கப்பற்சரக்கு இறக்கும்திண்ணை.-கெலிவா (Kalewa)வுக்கு வடக்கே சிண்டுவின் (Chindwin) நதியில். | | | |
| பண்டசாலைகள்.-தாங்கட் (Thaungeut). | | நஷ்டமில்லை. | |
| **28—5—42.** (வியாழக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| இரவில்.—விரோதி விமான தளங்கள் ரயில்வே லக்ஷியங்கள்—வட பிரான்ஸ் (France). | | | |
| விரோதி துணைக்கப்பற்படை.—டச்சுக் (Dutch) கடற்கரைக்கருகாமையில். | 4 கப்பல்கள் தாக்குண்டன. | 1 விமானம். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 28—5—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான எதிர்ப்புகள்.**—ஸிரேனெகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | **விரோதிக்கு சொந்தமான டாங்கிகள், மோட்டார் போக்குவரத்து.**—பர்ஹாக்ஹீம் (Birhakheim), ஆக்ரோமா (Acroma) இவைகளுக்கிடையேயுள்ள ரஸ்தாவில். | அநேக டாங்கிகள், வண்டிகள் சேதமாயின. | | |
| | **விரோதி விமானங்கள் இறங்குமிடங்கள்.**—மார்டுபா (Martuba). | | | |
| | **விரோதிக்குச் சொந்தமான வண்டிகள்.**—பெங்காஸி (Benghazi)க்கும் ஜெடபாயா (Jedabaya)வுக்கும் இடையேயுள்ள ரஸ்தாவில். | 3 விமானிகள் காப்பாற்றப் பட்டார்கள். | 5 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள்.—தரையிலுள்ள விமானங்கள்**—போர்முனை முழுவதிலும். | | 21 விமானங்கள். | 53 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **துறைமுகம், விமான நிலயம்.**—ராபால் (Rabaul). | | | |
| 29—5—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **பகலில்.—விமான எதிர்ப்புகள்**—வட பிரான்ஸ் (France), | | | |
| | நோம்-ரோம் (Gnome-Rhome) **விமான யந்திர தொழிற்சாலை, குட்ரீச் Goodrich) தொழிற்சாலைகள், இன்னும் மற்ற தொழிற்சாலைகள்.**—ஜெனிவிலியேர்ஸ் (Gennie villers) (பாரிஸுக்கருகாமையில்). | | | |
| | **கப்பல் துறைகள்.**—செர்பர்க் (Cherbourg), டீயப் (Dieppe). | | | |
| | **வெடிகண்ணி போடுவது.**—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **ரயில்வே போக்குவரத்துகள்.**—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| | **விரோதிக்குச் சொந்தமான துணைக் கப்பற் கூட்டம்.**—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கருகாமையில். | | 13 விமானங்கள். | |
| | **மற்றொரு துணைக்கப்பற் கூட்டம்.**—டச்சுக் (Dutch) கடற்கரைக்கருகாமையில். | 6 கப்பல்கள் தாக்குண்டன. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **29—5—42.** | (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—டிமிமி (Tmimi). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi), டெர்ணு (Derna). | | | |
| | விமானமிறங்கும் இடம்.—டெர்ணு (Derna). | | | |
| | விமான எதிர்ப்புகள்.— முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | யந்திர வண்டிகள், டாங்கிகள், மோட்டார் லாரிகள்.—பிர்ஹாக்ஹீம் (Birhakheim). | 3 விமானிகள் உயிர் தப்பினர். | 14 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 25 விமானங்கள். | 143 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்.** | | | |
| | கடல் விமானதளம்.—டுளகி (Tulaki). | | | |
| | விமான எதிர்ப்பு பீரங்கள், ஏற்றுமதி, இறக்குமதி துறைகள்.— டானம்போகா (Tanamboga). | | | |
| | **டிமோர் (Timior) (Dutch)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—டில்லி (Dilli). | | | |
| | **நியூ பிரிடன் (New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், துறைமுகம்.—ராபால் (Rabaul). | | | |
| **30—5—42.** | (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்—ராணுவ கட்டடங்கள், தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr), ரைன்லாந்து | | | |
| | கோலோன் (Cologne).—(1,000 நேசதேச விமானங்களால்) விமான நிலயங்கள், தரையிலுள்ள விமானங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசங்களில். | பெருத்த சேதம் விளைவிக்கப் பட்டது. | 44 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனேகா (Cyrenaica)வின் முன் அணிப் பிரதேசங்களில். | | | |
| | விரோதி விமானமிறங்குமிடங்கள்.—மார்டுபா (Martuba). | | | |
| | ராணுவ கட்டடங்கள்.-டிமிமி (Tmimi) பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.–போரரங்கம் முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**30—5—42.** (சனிக்கிழமை).—தொடர்ச்சி.

**தூரக்கிழக்கு–டிமோர் (Timor-Dutch)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விமான நிலயம்.-கோபாங் (Koepang).
துறைமுகம் பிரதேசம்.—டில்லி (Dilli).

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விமானம் பறப்பதற்கான இடம்.—லே (Lae)ல் கப்பல் துறை பிரதேசத்தில். — தீக்கள் கிளம்பின.

**தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

ஜப்பானிய படகுகள்.—மாயூ (Mayu) நதியில்.

**31—5—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

பகலில்.—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel) வேவு பார்த்தல்.
இரவில்.—விமான நிலயங்கள், தரையிலுள்ள **விமானங்கள்**, விமானம் பறப்பதற்கான இடங்கள், இருப்புப் பாதைகள், சாமான் ரயில் வண்டிகள். ஆக்கிரமித்த நாடுகளில்.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

**விமான** எதிர்ப்புகள்—ஸிரெனைகா (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்களில். — 4 விமானங்கள்; 3 விமானங்கள் சேதமாயின.

வழிதப்பிய **விமானங்கள்**.—டெர்னா (Derna) பிரதேசத்தில்.
**விமான நிலயங்கள்**.—டிமிமி (Tmimi) மார்டுபா (Martuba).
துறைமுகம்.—பெங்காஸி (Benghazi).

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

**விமானச் சண்டைகள்**, தரையிலுள்ள விமானங்கள்.—போர ரங்கம் முழுவதிலும்.

**தூரக்கிழக்கு பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.)

கப்பல் துறைகள், கப்பல்கள்.—ரெங்கூன் (Rangoon).

**தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

கப்பல் துறைப்பிரதேசம்.—ராபால் (Rabaul).

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

விமான நிலயங்கள்.—விமானம் பறப்பதற்கான இடங்கள்—லே (Lae) ஸாலாமா (Salamaua).

# விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **26—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—ஒரு இடம் இங்கிலாந்தின் (England) தென்மேற்குக் கடற்கரை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **27—5—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்.)** | | | |
| | இரவில்.—ஒரு இடம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglian). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமாங்களால்).** | | | |
| | விமான நிலயம்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகத்திற்கருகாமையில். | | 1 விமானம். | |
| **28—5—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்—ஸிரெனைகா (Cyrenaica). | | 3 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | 1 விமானம். | 7 விமானங்கள். |
| **29—5—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—கடற்கரைப் பிரதேசங்கள் கிழக்கு, தென்கிழக்கு இங்கிலாந்து (England). | சொற்பச் சேதமட்டில். | 4 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள், ஸப்ளை போக்குவரத்துகள்.-ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)-(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | மோர்ஸ்பி—(Moresby) துறைமுகம். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—5—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England) வடகிழக்குக் கரை. | | 7 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி—(Moresby) துறைமுகம் | | 5 விமானங்கள். | |
| **31—5—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும்—நடந்த விமான படையெடுப்புகளுக்கு தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.-மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| **1—6—42.** (திங்கட்கிழமை) | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.-ஒரு இடம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), தென்கிழக்கு இங்கிலாந்து (England). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby)—துறைமுகம். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**அழிக்கப்பட்ட விவரங்கள்.** 'கிடைக்கும் செய்திகள் ஏமாற்றத்தைத் தருகின்றன. அவைகளைப் பொது ஜனங்கள் தெரிந்து கொள்ளுவதால் பிரயோஜனமே இல்லை' என்று கோயபெல்ஸ் 1941, டிஸம்பர் 1௳ பெர்லின் மாணவர்களுக்கு எடுத்துச் சொன்னான். இதை அனுசரித்து அச்சு நாட்டு ஒலிபரப்புகளிலெல்லாம் தற்போது அபாண்டமான பொய்களும், கதைகளும் சொல்லப்படுகின்றன. முக்கியமாக பர்மாவிலிருந்து வெளியேறிய ஜெனரல் அலெக்ஸாண்டரைப்பற்றி பல விதமாகச் சொல்லப்படுகின்றன.

ஜெனரல் அலெக்ஸாண்டரின் படைகள் எல்லையைக் கடந்து கொஞ்சமும் சேதப்படாமல் தைரியமாக இந்தியாவிற்கு வந்து விட்டன. ஜெர்மன் ஜெனரல் ரோமல் சில மாதங்களுக்கு முன்னர் ஆச்சின்லக்கினால் துரத்தப்பட்டு ஓடியதில் எவ்வளவு சாமர்த்தியமிருந்ததோ அவ்வளவு கௌரவமும் இவருக்கு உண்டு. ஆனால் ஜெனரல் அலெக்ஸாண்டர் எதிரியின் பளுவு தாங்காது வரவில்லை. மாரிகாலம் உண்டாவதற்குள் ஸப்ளை மார்க்கம் முடிவடையாததால் ஸப்ளைகள் கிடைக்காதென்று நினைத்தே இந்தியாவிற்குள் வந்துவிட்டார். இல்லாவிட்டால் பர்மாவில் இன்னும் எதிர்த்து சண்டை செய்திருப்பார். இப்படி வந்த சைனியத்தை வேவல் பார்வையிட்டு 'சைனியம் சரியான நிலையிலிருக்கிறது' என்றார். 'இப்படி அச்சைனியம் வராவிட்டால் நிலைமை மோசமாகியிருந்திருக்கு மென்றும்' சொன்னார். சைனியத்தில் நாலில் ஐந்து பங்கு வந்து விட்டது. சிந்துவின் நதியில் வெள்ளம் பெருகிவிட்டதால்தான் சில போக்கு வரத்து சாதனங்களையும் சில டாங்கிகளையும் விட்டு வரவேண்டி வந்தது.

நிலைமை இப்படி இருக்கும்போது நேசதேசப்படை அழிக்கப்பட்டதாக பெர்லின், டோகியோ ஒலிபரப்புகளில் பிரமாதமாக கட்டி விடப்படுகின்றது. 'அழிக்கப்பட்டது' என்று ஜெர்மானியர் சொல்லுவதற்கு அர்த்தமே கிடையாது. டங்கர்க்கில் பிரிடிஷாரை அழித்ததாகச் சொன்னார்கள். ஆனால் அப்பேர்ப்பட்ட பிரிடிஷ் படைதான் கோலோனில் $1\frac{1}{2}$ மணி நேரம் குண்டுகளை வீசியது. கடந்த சரத் காலத்திலேயே ருஷ்யர்களை அழித்ததாகச் சொல்லுகின்றனர். அந்த ருஷ்யர்கள்தான் கார்கவ்வில் ஜெர்மானியரை விரட்டியடிக்கின்றனர். இவ்வித பிரசாரத்தில் ஜெர்மனிதான் ஒரு மாத்து அதிகமாகச் செய்து வருகிறது. மேமீ 16வ '2,00,000' பேர் கொண்ட அலெக்ஸாண்டர் படை அழிக்கப் பட்டதாகச் சொல்லப்பட்டது. இதிலுள்ள பிசகைப் பார்த்துக்கொண்டு 20,000 பேர்தான் அழிக்கப்பட்டதாக ஜப்பானியர் 17வ சொன்னார்கள். 18வ ஒரு காரணமுமில்லாமல் 32,000 பேர் என்று ஜெர்மனியில் சொல்லப்பட்டது. ஆனால் அதே தினத்தில் இவ்வெண்ணிக்கை 8,000-க்கு குறைக்கப்பட்டது. மறுபடியும் படேவியாவில் 20,000 என்று சொல்லப்பட்டது. இந்தத்தடவை அழிக்கப்பட்டது என்பதற்குப் பதிலாக தோற்கடிக்கப்பட்டது என்று மாத்தப்பட்டிருந்தது. இதுதான் அச்சு நாட்டுக் கூட்டாளிகளுக்குள் காணப்படும் ஒற்றுமை. மே 16வ பெர்லின் ஒலிபரப்பில் பின் வருமாறு சொல்லப்பட்டது. 'ஜப்பானிய அரசாங்கம் ஜெர்மன் அரசாங்கத்தார் கொடுக்கும் அறிக்கைகளைத்தான் பிரசித்தப் படுத்துவார்கள். அவையாவும் உண்மையானவை' என்று இருந்தது.

வி வி வி வி வி வி வி

**பருவ மழைகள்.** 'இந்தியாவிற்கு ஜப்பானியரை வர்வொட்டாமல் பருவ மழைகள் தடை செய்யுமா' என்று கேட்கப்படுகிறது. ஆனால் தற்காலத்திய சண்டைகளில் சீதோஷ்ண நிலைகளை நம்பியிருப்பது தவரான காரியமாகும். குளிர், வெய்யில், சகதி முதலியவைகளால் சண்டை நிற்காது என்பதை லிபியா, ருஷ்யா, மலேயா முதலிய இடங்களில் நடந்த சண்டைகளைப் பார்த்துக்கொள்ளலாம். சீதோஷ்ண முன்னேற்றத்தில் கொஞ்சம் தடையேற்படலாமே தவிர யுத்தமே நின்றுவிடாது. விமானத்தாக்குதலில் கூட சற்று கடுமையாக இருக்க முடியாது. அவ்வளவுதான். கடல்புயல் ஏற்பட்டால் அக்கரைச் சீமைகளுக்கு ஸப்ளை அனுப்பமுடியாததலால் ஆங்காங்குள்ள சைனியங்களை எளிதில் சிதைத்து விடலாம். இம்மாதிரியான பல தடைகளிலிருப்பதால் தற்சமயம் இந்தியாவை ஜப்பான் படையெடுக்காது என்று சுங்கிங் அதிகாரிகள் நினைக்கின்றனர்.

இவ்வளவும் ஜப்பான் படையெடுப்பு செய்யுமென்று வைத்துக்கொண்டு பேசினோம். இந்தியாவிற்கு வந்தால் பெரிய திட்டச் சண்டை செய்யவேண்டியிருக்குமாதலால் ஜப்பான் படையெடுக்காது. இதற்கு முன் இம்மாதிரி சண்டையை ஜப்பான் செய்தது மில்லை. இந்தியா ஜப்பானுக்கு வெகுதூரத்தில் இருக்கிறது. தேசமும் பெரிது. மேலும் நேசநாடுகள் அதிகபலம் செய்திருக்

கின்றன. தன்னைப் பிறர் தாக்காமல் ஜப்பான் பார்த்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. இதொரு பக்கமிருக்க சைனுவில் தற்காப்புப் போரில் ஜப்பான் ஈடுபட்டிருக்கிறது. தனக்கு ஏதோ அபாயம் வந்து விட்டதாகவே எண்ணியிருக்கிறது. ஆகவே சைனுவை ஜயிக்காமல் இந்தியா பக்கம் ஜப்பான் வராது என்றே சொல்லலாம்.

வி வி வி வி வி வி வி

**சைனு எதிர்த்து நிற்கிறது.** சைனுவை சுலபமாகக் கலைத்துவிட முடியாது. ருஷ்யாவை ஜெயித்து விட்டதாக பெர்லின் ரேடியோவில் பலதடவை சொல்லப்பட்ட விதமாக டோகியோ ரேடியோவும் கூறுகிறதே தவிர உண்மையில் ஒன்றுமில்லை. ஏப்ரல் 26வ டோகியோ ரேடியோவில், 'எல்லா விதத்திலும் ஷியாங்கெய்ஷெக்கால் எதிர்த்து நிற்க முடியும்' என்று சொல்லப்பட்டது. மே 2வ கிடைத்த செய்தியின்படி, ஹோனுனில் 4,000 ஜப்பானியப்படை திருப்பியடிக்கப்பட்டது. ஷென்ஸியிலிருந்து 5,000 ஜப்பானியர் விரட்டப்பட்டனர். மே 2வ டோகியோவிலிருந்து, 'சுங்கிங் படைகளுக்குள் ஒற்றுமையில்லை. ஆயுதங்கள் கிடைக்கவில்லை' என்றும் சொல்லப்பட்டது. ஆனுல் ஹான்கவ்விற்கு அருகில் 10,000 ஜப்பானியத்துருப்புகள் விரட்டப்பட்டன. யூனுனிலும் எதிரியால் முன்னேற முடியவில்லை. பின் நோக்கி ஓடவும் முடியவில்லை.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானிய சட்ட நிர்மாணத்திற்கு உதவும் அரசியல் சங்கம்.** என்ற பெயருடன் ஜப்பானில் ஒரு ஸ்தாபனம் ஆரம்பமாகி யிருக்கிறது. இதைக் கொண்டு கிழக்கு ஆசியா நாடுகளில் சண்டையை நடத்தி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுமாம். 'அகில ஆசியா பொது க்ஷேம திட்டம்' உண்டாக்கப்படுமாம். இதைப்பற்றி ஜப்பானிய சபைமுன்பாக மேமீ 20வ பிரஸ்தாபிக்கப்பட்டது. ஜெர்மனியில் செய்யப்படுவதுபோல் உடனேயே அங்கீகரிக்கப்பட்டது. ராணுவ மந்திரிகளையும் கப்பல் இலாகா மந்திரிகளையும் தவிர எல்லா இதர மந்திரிகளும் இதில் அங்கத்தினர்களாக சேர்ந்தனர். 'ஜனங்களுக்கு அரசியல் சம்பந்தமான உணர்ச்சியை மூட்டுவதும்' இதன் நோக்கமென்று சொல்லப்படுகிறது. ஆனுல் உண்மையில் ஜப்பானியர் செய்யும் யுத்தத்திற்கு உள்நாட்டில் ஒருவரும் தடைசெய்யாமல் பார்த்துக்கொள்ளுவதும், உலகத்தாரை ஏமாற்றுவதும்தான் நோக்கம். இவ்வித உட்கருத்து ஜப்பானிய ஒலிபரப்பிலிருந்தே வெளிவந்து விட்டது. அதாவது இவ்விதச் சங்கத்தைக்கொண்டு "ஜப்பானிய முன்னேற்றம், பொது க்ஷேமம்" முதலியவைகளை ஸ்தாபிப்பதற்காகவும் 'தேசிய தொழிற்சாலைகளும், தேசிய விவசாயமும், தேசிய வியாபாரமும் இதர இயக்கங்களும் ஆரம்பிக்கப்படும்' என்றும் சொல்லப்பட்டது. இவையாவும் ஜப்பான தேசத்தின் நன்மைக்கு என்பதில் சந்தேகமில்லை.

வி வி வி வி வி வி

**பொது க்ஷேமம்.** என்பது வெரும் ஏமாற்றம் என்று புலப்படுகிறது. டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து பின் கண்டசெய்தி கிடைத்திருக்கிறது. அதாவது ஜப்பானுக்கு யாவரும் அடங்கியிருப்பதாக பிரமாணம் செய்து கொடுக்கவேண்டும். ஆசியா வாசிகளாக இருந்தால் புருஷர்கள் 100 கில்டர் நாணயமும், ஸ்திரீகள் 50 கில்டர் நாணயமும் வரி கட்டவேண்டும். சிங்கப்பூரின் உபதலைவர் :—'பிரிடிஷாரின் உயிரைக் காப்பதே ஜப்பானியர் அவர்களுக்குச் செய்யும் உதவியாகுமென்பதை உணர வேண்டும்' என்ருர்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானின் பொருளாதார நிலை.** ஜப்பானின் ராணுவ முன்னேற்றம் அதன் பொருளாதார நிலையைக் குறைத்து விட்டது. பாதிப் பேருக்குத்தான் விவசாயம் ஜீவனமாக இருக்கிறது. யுத்த சாமான்களைச் செய்யும் தொழிற்சாலைகளைத்தவிர மற்றவைகளுக்கு நிலக்கரி

முதலிய விளைபொருள்கள் கிடைக்காததால் சரிவர வேலை நடைபெற வில்லை. திடசரீரம் வாய்ந்த யாவரும் சைனியம், தொழிற்சாலை முதலியவைகளில் கட்டாய வேலை செய்யவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**கார்கவ் சண்டை.** கார்கவ் சண்டையில் ருஷ்யர்கள் அடைந்த சாதகங்களைப்பற்றி தற்போது சொல்ல முடிகிறது. டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகை கூறும் விதமாக மார்ஷல் டிமோஷன் கோ முடிவான வெற்றியடையாதபோனாலும், சில லாபங்களையடைந்திருக்கிறார். காகஸைத் தாக்கவிருந்த வான் பாக்கின் சைனியம், 120 மைல் தூரம் சிதறி யடிக்கப்பட்டது. நஷ்டமேராளமிருக்கும் காரணத்தினாலேயே வசந்த கால ஜெர்மன் தாக்குதல் ஒத்திப்போடப்பட்டது. கார்கவ்வைப் பிடிப்பதற்கு லாயக்காக இருந்த இடங்களை ருஷ்யர்கள் பிடித்துக்கொண்டனர். இங்கே தற்காப்பு செய்து கொள்ளுவதற்காக எதிரி மற்ற அரசாங்களிலிருந்து விமானங்களை அழைத்துக் கொண்டிருக்கிறான். நீபருக்கும் இர்கரேனிக்கு இடையிலுள்ள ரயில்வே தாக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து கொண்டுதான் ஜெர்மானியர் காகஸஸைப் படையெடுக்க நினைத்திருந்தனர்.

வி வி வி வி வி வி வி

**காகஸஸ்.** ஜெர்மானியர் இருக்கும் இடத்திற்கு அப்பால் எங்கேயோ இருக்கிறது. 'யூரலும் காகஸஸும் அவைகளின் விலையுயர்ந்த விளைபொருள்களுடன் நாஸீ ஜெர்மனிக்கு உட்பட்டிருந்தால் ஜெர்மனி கொழுத்துவிடும்' என்று ஹிட்லர் மெயின் காம்ப் புஸ்தகத்தில் எழுதியிருந்தான்.

அவன் ஸ்வாதினத்தில் வந்தால் அப்படித்தான். ஆனால் அவைகளின் முக்கியத்வத்தைத் தெரிந்துகொண்டு ருஷ்யர்கள் பிரமாத படைகளை சேமித்து வைத்திருக்கின்றனர். 200 சதுர மைல் பிராந்தியத்திற்கு பாதுகாப்பு முறைகளாகவே இருக்கின்றன. சதுப்பு நிலம், நதி, காடு, மலை முதலியவையாவும் எதிரியின் யந்திரப் படைகளைத் தடுக்கக்கூடியவைகளாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குப் பின்புறம் ருஷ்ய கொரில்லா படைகளும் இருக்கின்றன.

காகஸஸுக்கு இதுவரை எத்தனையோ பேர்கள் படையெடுத்துச் சென்று இருக்கின்றனர். கெய்ஸர் தோற்றதும் இங்கேதான். ஹிட்லரும் இங்கேதான் தோற்கடிக்கப்படுவான். தற்சமயம் ஜெர்மன் டாங்கிகள் கார்கவ்வில் இருக்கின்றன. அங்கிருந்துதான் காகஸஸுக்குச் செல்லவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியின் துயரம்.** பின்கண்ட விஷயம் ஜெர்மனியின் துயரத்தைத் தெரியப்படுத்துகிறது:—

1. டாஸ்ரீச் பத்திரிகையில் கோயபெல்ஸ் எழுதியது:—'உறைபனிதான் நமது பெரிய சத்துரு. ஸப்ளைகளையனுப்ப அவைகளால் ஏற்படும் சிரமம் இவ்வளவு அவ்வளவு அல்ல. லாரியிலுள்ள எண்ணெய் கெட்டியாகிவிடும். குதிரைகள் கீழே விழும், பனியால் இருப்புப் பாதைகள் தடைபடும். ஆகவே விமான மூலம்தான் அனுப்ப முடிந்தது.,

'பல மாதங்கள்வரை குடும்பங்களிடமிருந்து தகவலே கிடைக்காது. சில நாள் உணவே கிடைக்காது போர்முனை வெகுதூரம் எட்டியிருப்பதால் எங்களுக்குத் தெரியாமல் ருஷ்யர்கள் வேலிகளைத் தாண்டி உணவுப் பண்டங்களை தாக்குவார்கள்.'

'பனியால் ஒவ்வொருவரின் முகமும் கருத்து விட்டது. இதுதான் மிகக் கடுமையான பனி காலமாக இருந்தது.'

கோயரிங் வேறு கதையைப் படிக்கிறான். அவன் அழுகை ஜெர்மன் தொழிலைப் பற்றியது. 'நமது ஸ்திரீ புருஷர்களுக்கு எவ்வளவு சிரமமென்று

பாருங்கள். இன்னும் மாரிகாலத் தொந்தரவுகள் நமக்கு இருக்கின்றன. தொழிலாளிகள் இங்குமங்கும் அலைந்து அதிகமணி நேரம் உழைக்க வேண்டியிருக்கிறது. இந்த யுத்தத்தை முடிவுவரை நடத்துவதற்காக கடவுள் யாவருக்கும் அதிக பலத்தைக் கொடுப்பாராக'

அடுத்த படியாக லுப்ட்வாபியைப் பற்றிய அழுகை (ஜெர்மன் ரேடியோ—மே 9).

'இரவு நேரங்களில் விமான் மூலம் தாக்கப்படாமல் இருக்க எந்த நாட்டையும் பாதுகாப்பு செய்துகொள்ள முடியாது. நமது ராக்கால விமானங்கள் எதிரி நாட்டில் படையெடுப்பு செய்கின்றன. உங்களைக் காக்கவும் அவைகள் முயலும். திரமான விமானங்களை நாம் ஈடுபடுத்தியிருக்கிறோம். மாணவிகளும் சீக்கிரத்திலேயே வேலையைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்'

கடைசியாக நிகரில்லாத ஜெர்மன் சைனியத்தின் ஒப்பாரி (நாஸி மேஜர் ஓடோ நூஸ்டார்ப்—மே 12).

'ருஷ்யச் செஞ் சைனியத்தின் ஒற்றுமை அப்படியே இருக்கிறது. 1941-ல் ஜெர்மானியர் தோற்கடித்ததெல்லாம் இரண்டாம் தரமான ருஷ்யச் சைனியத்தைத்தான் வரப்போகும் சண்டைகளுக்காக ருஷ்யர்களுடைய முதல் அணி வகுப்புகள் பத்திரமான நிலைகளுக்குக் கொண்டுபோகப்பட்டன. ஆகவே 1941 விட தற்சமயத்தில்தான் ஜெர்மானியருக்கு அதிக சிரமமிருக்கிறது.'

வி வி வி வி வீ வி வி

**'ரகசிய ஆயுதம்'** கெர்ச்சில் அடைந்த வெற்றிக்குக் காரணமாக ஏதோ ரகசிய கருவி உபயோகப்படுத்தப் பட்டதாக மே 1உ ஜெர்மானியர் சொன்னார்கள். அக்கருவி அதிக உஷ்ணமுள்ள கருவியென்றும், ஒரு படகென்றும், ஆகாய டார்பிடோ வென்றும், குண்டென்றும், சுரங்க வெடிகளைப் போடுகிறதென்றும், சுரங்க வெடியென்றும் பலவாராக வர்ணிக்கப்பட்டது. இவையாவும் பிரசார மந்திரி கோயபெல்ஸின் கல்பனை தான். இதன் தன்மையைத் தெரியப்படுத்த முடியாதெனறு தென் ஆபிரிக்கர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. 'இது டாங்கி' என்று பின்லாந்து ரேடியோ சொல்லிற்று. 'சண்டைப் படகு என்று விஷியும் 300 டிகிரி உண்ணமுள்ள பெரிய வெடியென்று ஜெர்மானியரும் சொன்னார்கள்.

இவையெல்லாம் நாஸி தந்திரங்கள்தான். ஏதோ விசித்திர சக்தியிருப்பதாகச் சொலலி பிறரை பிரமிக்கச் செய்து சுலபமாக வெற்றியடையலாமென்பது அவர்களின் கருத்து.

'பிரமிக்கச் செய்வதென்பது யுத்த தந்திரஙகளில் ஒன்றுதான். ஆனால் ரகசியக் கருவிகள் அப்படி பிரமாதமாக இருப்பதாகத் தெரியவில்லை. அவைகளும் பயன்படாது. ஏனென்றால் அவைகளுக்கு பிரதியாக மற்றொன்று கண்டு பிடிக்கப்படும். உதாரணமாக சுரஙக வெடிகளைப் பார்த்துக்கொள்ளலாம்.'

வி வி வி வி வி வி வி

**டாரே பதவி யிழந்தான்.** ஜெர்மனியின் விவசாய மந்திரியாயிருந்த ரிச்சர்டு வால்டர் டாரே பதவி யிழந்தான். கடும் குளிரால் சென்ற வருஷம் உருளைக்கிழங்குப் பயிர் சேதமானதும் இவ்வருஷம் பார்லியும், கோதுமையும் சேதமானதும்தான் குற்றம். பாவம் இதற்கு டாரே என்ன செய்வான். வழக்கப்படி வேறு ஒருவனை ஹிட்லர் நியமித்திருக்கிறான். அவன் எவ்வாறு உற்பத்தி செய்வானோ தெரியவில்லை.

ஹிட்லரை அண்டியிருப்போருக்கு இதுதான் கதி. ஒரு சமயம் தலையில் தூக்கிக்கொண்டாடப்படுவார்கள், அடுத்த நிமிஷம் உதரித்தள்ளப்படுவார்கள். ஒரு சமயத்தில் விவசாயிகளுக்கும், ரஸாயனத்திற்கும் புதிதான விஷயங்களைக் கண்டு பிடித்து விவசாயிகளின் நிலையை முன்னுக்குக்கொண்டு வந்தானென்று இவனுக்கு நல்ல பெயர் கிடைத்தது. 'ராணுவ சேவை, ஜன உற்பத்தி, ஆக்கிரமித்த நாடுகளில் அடிமைத்தனம்' முதலியவைகளை இவன்தான் ஆரம்பம் செய்

தது. இப்பேர்பட்டவனுக்கு இந்த சிறிய தண்டனை போதாதுதான். இன்னும் ஹிட்லர் ஆட்சியில் எவ்வளவோ கிடைக்கும்.

வி வி வி வி வி வி வி

**கடல் யுத்தம்.** இவ் வாரத்தில் இரண்டு வருஷக் கொண்டாட்டங்கள் நடந்திருக்கின்றன. ஒன்று மே 22உ. அமெரிக்க கப்பல் தினமும் 24உ பிரிடிஷ் சாம்ராஜ்யதினமும் கொண்டாப்பட்டன. மே 26உ, மத்தியதரைக்கடல் அதிகாரத்திலிருந்து மாற்றப்பட்டுள்ள அட்மிரல் கனனிங்ஹாம் பின் வருமாறு சொன்னார்:—'1940, 41, 42 வருஷங்களில் அடைந்த அனுபவங்களை நாம் மறக்காமலிருந்தால் எதிரியை நாம் ஜயிதது விடலாமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.' மத்தியதரை கடல் நிலையைப்பற்றி அவர் சொல்லும்போது இந்த யுத்தம் நான்கு விதமாக நடக்கிறது என்றார். அதாவது எதிரிமேல் பொருளாதார முற்றுகையிடுவதும், இதாலிக்கு மனக்குறையேற்படுவதும், தாத்காலிக ஜெர்மன் விமான ஆதிக்கமும், பிரகிருத நிலையும்தான். இதாலி சண்டையில் சேருவதற்கு முன்பு பிரிடிஷ் முற்றுகை ஆரம்பமாயிற்று. மத்தியதரைக்கடலை பிரிடிஷார் வியாபித்ததும் இதாலிக்கு மனக்குறையேற்பட்டது. அதன் முடிவுதான் டாரன்டோ சம்பவம். விமானமேற்றிய பிரிடிஷ் கப்பல்கள் வந்ததும் இதாலிய கப்பல் படையின் ஆதிக்கம் போய்விட்டது.

லிபியாவில் இதாலியப் படையை வேவல் தோற்கடித்ததும், அவர்களைக் காப்பாற்ற ஜெர்மன் விமானங்கள் வந்தன. இதன் முடிவுதான் கிரீட் சம்பவம். அதே சமயத்தில் மடபனில் இதாலியருக்கு ஒரு பாடமும் கற்றுக்கொடுக்கப்பட்டது. தூரக் கிழக்கு முதலிய இடங்களுக்குத் தேவையிருந்தபோதிலும் மத்தியதரைக்கடலிலுள்ள பிரிடிஷ் கப்பற்படை ஆதிக்கத்துடனேயிருக்கிறது. மார்ச்சு மாதத்தில் மால்டா மீது கூடும் தாக்குதல் நடக்கும்போது ஸர் பிலிப் வியான் தனது கப்பல் கூட்டத்தை அழைத்துச் சென்றார். ஜெர்மன் விமானத் தாக்குதலை லக்ஷியம் செய்யாமல் மால்டா எதிர்த்து நிற்கிறது.

பிரிடிஷ் கப்பல்களின் நஷ்டம் அதிகமாகிக்கொண்டே போவதாக ஹாஹா மாத்திரம் கட்டி விட்டுக்கொண்டு போகிறான். உண்மையில் ஒரு வருஷத்திற்கு முன் இருந்ததைவிட தற்சமயம் நஷ்டம் மிகக் குறைவு. அட்லாண்டிக் வழியாக வட அயர்லாந்திற்கு ஏராள அமெரிக்கப் படைவந்ததே இதற்கு ஒரு அத்தாக்ஷியாகும்.

வி வி வி வி வி வி வி

**மெக்ஸிக்கோ சண்டை தொடுக்கிறது.** இது ஒரு விசேஷ சம்பவம். மெக்ஸிகோ, காடிமாலா, ஹான்டுராஸ், ஸால்வடார், கோஸ்டாரீகா, பனாமா இவை யாவும் பனாமா கால்வாய், காரிபியன் கடல் முதலியவைகளைப் பாதுகாக்கும். காரிபியன் கடலிலுள்ள தளங்கள்அகில அமெரிக்கப் பாதுகாப்பிற்கு மிக அவசியம். இல்லாவிட்டால் அட்லாண்டிக் பக்கமாக பனாமா கால்வாயில் தாக்குதல் நேர்ந்தால் அமெரிக்கப் படையை பஸிபிக் பக்கம் அனுப்ப முடியாது. போர்டுரீகோ, கான்டனாமோ, பனாமா, ஸான்டீகோ முதலிய துறைமுகங்களில் அமெரிக்க கப்பல்களை விருத்தி செய்யலாம். விராகுரூஸ், லெகுனிடெல்கார்மன், டாம்போ, மெஸட்லாள், மன்ஸானிலோ, எஸ்மார்சுீடா, அகபுல்கோ முதலிய மெக்ஸிகோ துறைமுகங்களையும் உபயோகித்துக்கொள்ள முடியும். மெக்ஸிகோ நேசதேசப் பக்கம் சேர்ந்ததிலிருந்தே நேசதேசங்கள் சரியான காரணங்களுக்காக சண்டையிடுவதும், வெற்றியிலுள்ள நம்பிக்கையும் யாவருக்கும் தெரியும்.

வி வி வி வி வி வி வி

**கிளாஸ்டர் கோமகனின் சுற்றுப் பிரயாணம்.** மத்தியக் கிழக்கு நாடுகளில் இவர் செய்த சுற்றுப் பிரயாணத்தினால் முஸ்லீம் நாடுகளுக்கு அதிக சிநேகம் ஏற்பட்டது. நாலுவார காலத்தில் மேற்குப் பாலைவனம், இராக், இரான், பாலஸ்தீனம், ஸிரியா,

லெபனன் முதலிய இடங்களைச் சுற்றிப் பார்த்தார். சென்ற இடங்களிலெல்லாம் இவருக்கு அராபியர் செய்த வரவேற்புகளே ஜனநாயகத்தின் சரியான காரணத்தையும், பாஸிஸ்டு கொடுங்கோல் பேரிலுள்ள வெறுப்பை தெரியப்படுத்தின. எகிப்து வாரப்பத்திரிகை அல்-இட்னீன் பின்கண்ட விதமாக அபிப்பிராயம் கொடுத்திருந்தது. 'எகிப்துக்கு இவர் செய்த விஜயத்தால் ஆங்கிலேய-எகிப்து சம்பந்தம் பலமடைந்தது.' நேசநாடுகளின் பிரியத்தை இவர் பெற்றார்.

வி வி வி வி வி வி வி

**அச்சு நாடுகளும், அராபியர்களும்.** இந்த நிலையில் இரண்டு துரோகிகளான ரஷித் அலியும், ஜெருஸலத்துத் தலைவனும் அச்சு நாடுகளின் உதவி பெற்று அராபியா நாடுகளை விடுவிக்கவேண்டுமென்று சொன்னார்களாம். அதற்கு ரிப்பன் டிராப் உதவியளிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறான். உண்மையில் ஸாடி அராபியா ஏற்கனவேயே ஸ்வதந்திரத்துடன் இருக்கிறது. எகிப்து இன்னும் சண்டையில் ஈடுபடவில்லை இராக் 1930 வருஷத்திய உடன்படிக்கையின் படி ஸ்வதந்திரமாக இருக்கிறது. ஸிரியாவும், லெபனனும் ஸ்வதந்திரத்திற்கான ஏற்பாட்டில் இருக்கின்றன.

ரிப்பன் டிராப்பின் வாக்குறிதிக்கு யாங்சின், யேனிஸபா பத்திரிகையில் பின்கண்ட கேள்விகளைக் கேட்கிறார்.

'முஸ்லீம் நாடான அல்பேனியாவின் நிலை என்ன?

'செக்கோஸ்லாவியாவிற்கு நேர்ந்தகதி என்ன? போலாந்திற்கு நேர்ந்தது மறக்கப்பட்டதா? முஸ்லீம் நாடுகளுக்கு ஸ்வதந்திரமளிக்கும் அச்சு நாடுகள் லிபியா, டிரிபாலிடானியா முதலிய நாடுகளிலுள்ளோரின் ஸ்வதந்திரத்தை கவனியாதா? டுனிஸ்ஸையும் பிரான்ஸையும் பிடிக்கவே இதாலி சண்டையில் சேரவில்லையா. டுனிஸ்ஸிக்கு ஸ்வதந்திரமளிக்கவா இதாலி விரும்பிற்று.

அராபியர் வாழும் வட ஆப்பிரிக்காவைப் பிடிப்பதற்கு அல்லவா?

அல்ஹவாடித்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

"ஆக்கிரமித்த பிரான்ஸிற்கும், ஆக்கிரமிக்காத பிரான்ஸிற்கும் இடையில் எல்லைப்புறத்தைக் கடந்து அராபியரும், யூதர்களும், கருப்பு ஜாதியாரும் செல்லக்கூடாது. அராபியர் இதை எவ்வாறு நினைப்பார்கள். நாஸிகள் இவர்களுக்கு தயவு காட்டுவதாகச் சொல்லிக்கொள்ளுவது சரிதானா?"

ஜெர்மனியைப் பார்த்துவிட்டு ஜப்பானும் முஸ்லீம் நாடுகளில் கடும் திட்டங்களைத் தயார்செய்து வருகிறது. ஆனால் உலகம் இனி ஏமாறாது.

ஜப்பானிய எண்ணங்களைப்பற்றி மத்தியக்கிழக்கு நாட்டு விமர்சனம் என்ற பத்திரிகையில் பின்கண்ட விதமாக எழுதப்பட்டிருந்தது.

வி வி வி வி வி வி வி

**எகிப்து நினைப்பதென்ன.** "இயற்கையாக பிறரை ஜப்பானியர் வெறுக்கின்றனர். தங்கள் மதக் கொள்கைகளைத்தான் கொண்டாடுவார்கள். தற்சமயத்தில் மோசகரமாக முஸ்லீம்களைப்பற்றி சாதகமாக ஒலிபரப்பப்படுகிறது. ஜப்பானிலும், ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளிலும் இஸ்லாம் கொடும் திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

"மற்ற நாடுகளில் செய்வதைப்போல கோரிகளுக்கு ஜப்பானியரும் வரிப் போடுகின்றனர். பல கோரிகள் மூடப்பட்டு ராணுவங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இப்பேர்ப்பட்டவர்களுடன் முஸ்லீம்கள் ஒத்துழைக்கமாட்டார்கள். அவர்களுடைய கொள்கை நமக்குப் பிடிக்காது."

**இராக் நினைப்பது என்ன ?** பிரிடிஷ், அமெரிக்க, டச்சு ஆட்சிக்கு உட்பட்டிருப்பதால் அனுபவிக்கும் ஸ்வதந்திரத்தையும், மதத்தையும் எவ்விதம் ஜப்பானிய அரக்கர்களிடம் ஒப்படைப்பது. அவர்களுக்கு கொடுங்கோல், வெறுப்பு, மதக்கொலை முதலியவைதான் கொள்கை.

"மதத்தைத் தழுவுகிறவர்கள் ஜப்பானியருடன் எவ்விதம் ஒத்துழைக்க முடியும். ஜப்பானிய சக்கிரவர்த்தியை எவ்விதம் கடவுளென்று அங்கீகரிக்க முடியும். ஆகவேதான் ஜப்பானியர் முதலியோரை எதிர்க்க எல்லா முஸ்லீம்களும் ஒன்று சேர்ந்திருக்கின்றன.

---

# தேசிய யுத்த முன்னணி.

---

## மெஷினில் அரைத்த அரிசியில் அதிக சேதம் ஏற்படுகிறது.

---

### அரிசி சாப்பிடுகிறவர்களுக்கு சென்னை ஸர்க்காரின் புத்திமதி.

மெஷினில் அரைக்கப்படும் நெல்லையெல்லாம் கைகுத்து அரிசியாகத் தயாரித்தால் இம்மாகாணத்தில் அதிகப்படியாக 2,00,000 டன்கள் அரிசி கிடைக்குமென்று மதிப்பிடப்படுகிறது. யந்திரங்களினாலேயே அரைகுறையாய் அரைத்த அரிசி அல்லது ஒரு தடவை தீட்டப்பட்ட அரிசியைப் போலவே தான் கைக்குத்து அரிசியும் இருக்குமாதலால், அதன் அனுகூலங்களை வற்புறுத்திச் சென்னை ஸர்க்கார் அபிவிருத்தி இலாகா ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

சமீபகாலத்தில் இந்தியாவுக்குத் தேவையான அரிசியை இந்தியாவிலே உற்பத்தி செய்து கொள்ள முடியவில்லை. அது சென்ற 10 வருஷ காலத்தில் பர்மா, தாய்லாந்து, இந்தோசீனா முதலிய இடங்களிலிருந்து வருஷத்திற்கு இம்மாகாணத்தில் விளையும் அரிசியைத் தவிர 11 லக்ஷம் டன் முதல் 26 லக்ஷம் டன் வரை இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவின் மொத்த இறக்குமதியில் 10 சதவிகிதம் அதாவது 5 முதல் 7 லக்ஷம் டன் நிறையுள்ள அரிசி இந்த மாகாணத்திலேயே செலவாகி விடுகிறது.

இப்பொழுது மேற்சொல்லிய இடங்களிலிருந்து இறக்குமதியில்லாமல் போய் விட்டது. ஆனால் யுத்த நெருக்கடியினால் சென்னை இராஜதானியிலிருந்து ஸிலோனுக்கும், மற்ற ஊர்களுக்கும் அரிசி அதிகமாக ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் இத்தேசத்தில் உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வது அத்தியாவசியமாக இருக்கிறது ஏப்ரல் மாதம் 6-ம் தேதி நியூ டெல்ஹியில் கூடிய மகாநாட்டில், மற்ற விஷயங்களோடு கைக்குத்து அரிசியையும் அரை குறையாகத் தீட்டப்பட்ட அரிசியையும், நன்றாகத் தீட்டப்பட்ட அரிசிக்குப் பதிலாக உபயோகப்படுத்தும்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், கைக்குத்து அரிசியிலிருந்து அதிக சத்துள்ள தானியம் கிடைப்பதால் இப்பொழுது இருக்கும் ஸப்ளைகள் அதிக நாட்களுக்கு வருமென்றும், இந்த சந்தர்ப்பத்தில் பொதுமக்களுக்குப் போதுமான உணவு கிடைக்குமென்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதனால் அரிசித் தட்டால் ஏற்படும் பிரச்னை ஓரளவு குறையும்.

### உபரி ஸப்ளை.

கைக்குத்து அரிசியினால் இரண்டுவித சாதகங்கள் உண்டு. முதலாவது கைக்குத்து அரிசியிலிருந்து அதிக சத்துள்ள தானியம் கிடைக்கிறது. அடுத்தபடியாக இதனால் ஒரு குறிப்பிட்ட இடை நெல்லுக்கு 6 சதம் அதிகமாக அரிசி கிடைக்கிறது.

மேலும் அரிசி சாதம் சாப்பிடுகிறவர்களுக்கு சத்து அதிகப்படுத்த வேண்டுமானல் அந்த உணவில் ஒரு பாகத்தில் அரிசிக்குப் பதிலாக வேறு தானியங்கள், உதாரணமாக சோளம், கம்பு, கேப்பை, தினை முதலிய பொருள்களை உபயோகிக்க வேண்டும். அப்பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டால் அநேகமாக பாதி அளவு அரிசிக்குப் பதிலாக சோளம் முதலிய தானியங்களை உபயோகித்துக் கொள்ளலாம். ஐந்து அவுன்ஸ் அரிசிக்கு பதிலாக ஐந்து அவுன்ஸ் தானியம் சேர்த்துக்கொள்ளலாம். வட ஸர்க்கார் பிரதேசங்களில் சில பாகங்களில் மெஷினில் தயாரித்த அரிசிக்குப் பதிலாக தானியங்கள் உபயோகப்படுத்தியதில் தேகத்திற்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுத்ததுமன்றி பெரிபெரி (Beriberi) அதாவது மகோதரம் போன்ற வியாதியை அதிகம் பரவாமல் தடுத்து விட்டது. ஏனென்ருல் யந்திரத்தில் அரைக்கப்படும் அரிசியைக் காட்டிலும் தானியங்களில் B-1 என்ற சத்துப்பொருள்கள் அதிகம் இருக்கின்றன.

---

## இந்தியாவிலும் ஜனங்கள் திடமனதுடன் நடந்து கொண்டால், நன்மை ஏற்படும்.

(கென்னத் பிண்டாப் என்பவர் எழுதியது).

[இதை எழுதியவர் முந்தி லண்டனில் பத்திரிகை ஆசிரியராக இருந்தார் 1940-ல படையெடுப்பு ஏற்படுமென்று பயமிருந்தபொழுது பிரிடிஷ் பொது மக்களுக்கு என்ன உணர்ச்சி இருந்தது என்பதை ஆராய்ந்து அறிந்தவர். அத்தகைய பயமும், சந்தேகமும் இப்பொழுது இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் சமயம் அவர் இந்தியாவுக்கு வந்திருக்கிருர். தேசத்தின் தற்காப்பு ஆயுதங்களில் தைரியமும், மன உறுதியும் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்கள் என்பதை அவர் நிரூபிக்கிருர்.]

1940-ம் வருஷம் கோடை ஆரம்பமான பொழுது ஜெர்மன் ஆக்கிரமிப்பினுல் பிரான்ஸ் அடிமையாக்கப்பட்டும், இங்கிலீஷ் கால்வாயிலுள்ள துறைமுகங்கள் ஜெர்மனி வசமானபொழுதும், இப்பொழுது இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமையைப் போலவே கிரேட் பிரிடனிலும் விரோதிகள் படையெடுப்பார்களோ என்ற பயம் ஏற்பட்டிருந்தது.

கொடுமையாகவும், மூர்க்கத்தனமாகவும் இருக்கும் அந்த எதிரி ஆரம்பத்தில் கிடைத்த வெற்றியினுல் வெறிகொண்டு கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் தன் வசத்திலுள்ள முழு பலத்தினுலும் பெரிய படையெடுப்பைச் செய்து பார்த்தாலும் பார்த்து விடுவான் என்று தோன்றிற்று.

அதற்கு பொதுமக்களின் உடன்காலத்தில் செய்த நடவடிக்கை பிரமிப்பைக் கொடுக்கத்தக்கதாக இருந்தது, படையெடுப்பா! முடியாத காரியம். அநேக நூற்ருண்டுகளாகவே பிரிடனின் கடற்கரை இது வரை படையெடுக்கப்படவில்லை. படையெடுப்பா? மூடத்தனம்!

சாதாரண பொது மனிதனுக்கு இது திடீரென்று நேரிட்ட போதிலும் அதற்கு அவன் அரசாங்கத்தைக் குறை கூருமல் உடனே யோசனை செய்து அப்படி நடக்கவேண்டுமென்பதைத் தீர்மானித்துவிட்டான். அதற்கு அரசாங்கத்தார் மட்டிலும் அல்ல, உத்தியோகஸ்தர்கள் மட்டிலுமல்ல; ஒவ்வொருவரும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அப்படியே நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்.

ஆடம்பரமோ, பீதியோ, இல்லாமல் அமைதியாக கடலிலும், ஆகாயத்திலும், தரையிலும் சண்டையிடுவோர்களுக்கு பூர்ண உதவியை அளிப்பதற்கு பொது மக்கள் தயாராகி விட்டார்கள்.

டங்கர்க்கிலிருந்து பின்வாங்கியபொழுது படகு ஓட்டத் தெரிந்த ஒவ்வொருவனும் உபயோகப்படத்தக்க படகுகளை எடுத்துக்கொண்டு போர் வீரர்களைக் காப்பாற்ற தானுகவே உதவிசெய்ய முன்வந்தார்கள். பிரான்ஸுக்கு சமீபத்தில்

இங்கிலீஷ் கால்வாயில் டனி உரைந்த, மலைகள் நிறைந்த டோவர் துறைமுகத்தில் நான் இருந்தேன். பிரான்ஸ் அடிமையானதினால் அதிலுள்ள ஜனங்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு வருவதை அந்த இடத்திலிருந்து நான் பார்க்க நேரிட்டது.

சுலபமாய் ஜயித்துவிடலாம் என்ற எண்ணம் பிரிடிஷாரின் மனதை விட்டு அகன்றது. இங்கிலீஷ் கால்வாயின் கிழக்குப் பக்கத்திலுள்ள துறைமுகங்கள் எதிரியால் கைப்பற்றப்பட்டு எதிரி கிரேட் பிரிடனின் வாயிலில் இருந்தபொழுது, கிரேட் பிரிடனை எதிரி எவ்வளவு சீக்கிரத்தில் தாக்கப் போகிறான் என்று ஒருவருக்கும் தெரியாது. ராணுவ திட்டங்கள் அமைக்கப்பட்டிருந்ததற்குத் தகுந்தவாறு பொதுமக்களும் ஒத்துழைக்கத் தயாராக இருந்தார்கள். எதிரி வந்தால் கடலில் தூக்கி எறிவது, என்ற ஒரு பெரிய நோக்கத்துடன் ஒவ்வொரு வரும், ஒன்று சேர்ந்திருந்தார்கள்.

யுத்தம் ஆரம்பித்தால் தடங்கலாய் இருக்கக்கூடிய வயதானவர்களையும், குழந்தைகளையும் முதன் முதலில் அந்தப் பிராந்தியத்தைவிட்டு வெளிக்கடத்தப் பட்டார்கள். ஆங்காங்குள்ள அதிகாரிகள் பிரசுரித்த திட்டப்படி எல்லாம் நடத்தப்பட்டன. நூற்றுக் கணக்காக ரயில் வண்டிகள் அபாயமில்லாத பிரதேசத் திற்கு ஜனங்களை ஏற்றிச்சென்றன. ரயில் சத்தம் கொடுக்க சக்தியற்றவர்களுக்கு இனாமாக டிக்கட்டுகள் கொடுக்கப்பட்டன. ஆனால் அப்படி இனாமாக டிக்கட்டுகள் பெற்றவர்களுக்கு அபாயம் நீங்கினால் திரும்பி வருவதற்கு அம்மாதிரி இனாமாகச் டிக்கட்டுகள் கொடுக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டது.

### பின்காட்டி ஓடினதல்ல.

அந்தந்த ஸ்தானங்களிலேயே இருக்கவேண்டியதாகக் கருதப்பட்ட முக்கிய மான ஸ்தானங்களில் வேலைபார்க்கும் வேலைக்காரர்களின் ஜாபிதா பிரசுரிக்கப்பட் டது. ஆங்காங்குள்ள அரசாங்க அதிகாரிகள் புகை, (gas) மின்சாரம், தண்ணீர் ஸப்ளை இவைகளில் வேலை செய்பவர்கள், உணவு ஸப்ளை செய்யும் வியாபார ஸ்தலங்களிலுள்ள ஆண், பெண்கள், வைத்தியர்கள், பாங்கி உத்தியோகஸ்தர்கள் வார்டன்கள் மற்றபடி ஆகாய விமானத் தாக்குதல் நடந்தால் அதற்கு உதவி செய்யவேண்டியவர்கள், பாலம், கட்டடம் அழிக்க நியமிக்கப்பட்டவர்கள், இன்னும் பொதுஜன ஸ்தாபனத்திற்கு வேலை செய்வதாக வாக்குறுதி கொடுத்த வர்கள் ஆகிய இவர்களின் பேர்கள் அந்த ஜாப்தாவில் கண்டிருந்தது.

என்ன நேர்ந்தாலும் பின்வாங்கக்கூடாது என்று அவர்களுக்கு அறிவிக்கப் பட்டது. ஏனென்றால் துப்பாக்கி சுட தயாராக வைத்திருக்கும் சிப்பாய்கள் என்ன, ஜெர்மன் பாம்பர் விமானங்களைத் தகர்க்கக்கூடிய ஆகாய விமானப்படை வீரர்கள் என்ன, கப்பற்படை வீரர்கள் என்ன இவர்களைப் போலவே முன்னே சொல்லியவர்களும் யுத்தத்தில் முன்னணி வீரர்கள்தான்.

பிரான்ஸில் ரஸ்தாக்களில் நடந்துசென்ற பொது மக்களை எதிரிகள் வெடி குண்டுகளாலும், யந்திர பீரங்கிகளாலும் சுட்டு, கொல்லப்பட்டு, பிணக்குவியல்கள் கிடந்ததினால் ராணுவ கோஷ்டிகள் முன்னணிக்குச் செல்லமுடியாமல் தடைப் பட்டிருந்த பிரகாரம் கிரேட் பிரிடனிலும் அவ்வாறு நடக்காமல் முன்னெச்சரிக்கை செய்யப்பட்டது. என்ன நேர்ந்தாலும் அவன் எந்த இடத்தில் இருக்கிறானோ அதைவிட்டு நகரக்கூடாது என்பதுதான் அதன்கருத்து.

ஒவ்வொருவரும் பொருள்களை ஏராளமாக சேர்த்து வைத்துக்கொள்ளக் கூடாதென்று தடுக்கப்பட்டார்கள். ஆனால் அங்கு தங்கின குடும்பத்தார்களுக்கு படையெடுப்பு நேர்ந்தால் அரசாங்கத்தார் உணவு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும்வரை தேவையான உணவை கொஞ்சம் சேமித்து வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். அதிகம் அழிவு நேரிடக்கூடிய பிராந்தியங்களில் பொது ஜனங்களுக்கு உணவு அளிக்கும் ஸ்தாபனங்கள் நியமிக்கப்பட்டன.

போருக்கு எல்லாம் ஆயுத்தமாய் விட்டார்கள். பிரான்ஸ் அடிமையாக்கப் பட்ட சில தினங்களுக்குள்ளாகவே எல்லாம் தயாராகிவிட்டன. படையெடுப்பு நேர்ந்தால் அதற்குத் தயாராக காத்துக்கொண்டிருந்தார்கள்.

எப்படி படையெடுப்பு நேரிடும்? எங்கே தாக்கப்படும்? அப்படி படையெடுப்பு நேர்ந்தால் பொதுமக்களின் உணர்ச்சி எவ்விதம் மாறுபடும்? இப்பொழுது பொது மக்களுக்கிருக்கும் அமைதியும், நம்பிக்கையுமுள்ள உணர்ச்சி நிலைத்து நிற்குமா? அல்லது எங்கும் கலவரமாக இருக்குமா? ஒரு தேசத்தாரின் கதி இந்தக் கேள்விகளுக்குக் கிடைக்கக்கூடிய பதிலைப் பொருத்திருக்கிறது. உலகம் பூராவும் இப்படித்தான், போர்வீரர்களின் தைரியத்தையும், சாமார்த்தியத்தையும் போலவே பொது மக்களின் உணர்ச்சியும் இருக்கவேண்டும்.

"விமானப் படையெடுப்பை சமாளிக்க மூன்று முக்கிய விஷயங்கள் தேவை. அதாவது சண்டை விமானமும், விமான எதிர்ப்புப் பீரங்கிகளும்; விமான படையெடுப்பு பாதுகாப்புகளும் (A. R. P.); ஜனங்களின் ஊக்கமும், ஒழுங்கு முறையும். இதில் கடைசி விஷயம் மிகவும் முக்கியமானது."

—ஜெனரல் வேவல்.

## முதல் தாக்குதல்.

இப்பொழுது முதல் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலீஷ் கால்வாயில் எதிர் பக்கத்தில் 22 மைல்களுக்கப்பாலுள்ள தளங்களிலிருந்து அந்தத் துறை முகங்களில் கூடியிருக்கும் கப்பல்கள் போவதற்கு வழி ஏற்படுத்துவதற்காக ஏராளமான பாம்பர் விமானங்கள் முதன் முதலில் தாக்க ஆரம்பித்தன. அல்லும், பகலும் ஆயிரக்கணக்கான டன்கள் நிறைந்த அதிகமாக வெடிக்கும் வெடி குண்டுகள் நாடு நகரங்களிலெல்லாம் பொழிந்தன. ஆஸ்பத்திரிகள், மாதா கோவில்கள், தெருக்கள், குடியானவர்களின் வீடுகள், நகர விடுதிகள், நாட்டுப் புறத்திலுள்ள குடிசைகள், இவையெல்லாவற்றையும் பொது மக்களின் உணர்ச்சியைக் குறைவுபடுத்துவதற்காக தகுந்த லக்ஷியங்களாக கருதப்பட்டு தாக்கப்பட்டன.

எதிரியினுல் முடிந்தவரை கொரேமாகவும், ஆக்ரோஷமாகவும் தாக்குதல்கள் செய்யப்பட்டன. ஆனல் சாதாரண பொதுமக்களும் திடசித்தத்துடன் இருந்தார்கள். விடுமுறை நாட்களுக்காக தங்குமிடங்களில் வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் ஸ்நானம் செய்யப்போகிறவர்கள் இருந்ததுபோக, இப்பொழுது ஒருவரும் அங்கு போவதில்லை. நேர்த்தியான கட்டடங்கள் இருந்ததெல்லாம் இப்பொழுது எங்குபார்த்தாலும் அவைகள் அழிக்கப்பட்டிருந்தன.

ராம்ஸ் கேட் ஒரு அழகிய சிறு நகரம். அதில் 1,700 வீடுகள் உண்டு. அதன் ஜனத்தொகை சாதாரண காலத்தில் சுமார் 40,000. அப்பொழுது நடந்த ஒரு விமானத் தாக்குதலில் அந்நகரம் பூராவும் பாழாக்கப்பட்டது. அதிக தூரம் சுடக்கூடிய பீரங்கிகளிலிருந்து வெடிகுண்டுகள் டோவர் நகரத்திற்குள்ளே வந்து விழுந்தன. வெடிகுண்டு விமானங்களினுலும் அங்கு அழிவு நேரிட்டது. ஆனல் எங்குபார்த்தாலும் ஜனங்கள் உத்ஸாகத்துடன் இருந்தார்கள். போஜன சாலையில் சாப்பிடவும், ரஸ்தா மூலமாகவும், இருப்புப்பாதை மூலமாகவும் போக்கு வரத்து நடந்துகொண்டிருந்தது. சிறிது காலத்திற்கு இளைப்பாற வந்தவர்களுக்குப் படக்காக்ஷிகளும், நர்த்தனங்களும உண்டு.

நிலங்களில் கதிரறுப்பவர்கள் பெண்களும், வயது முதிர்ந்தவர்களும் ஹிட்லரின் கொடிய செய்கைகளுக்குக் கொஞ்சமும் பயமடைந்து பின்வாங்காமல் உழைத்து, அருமையான தானியத்தைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். தானியங்களை வீடுகளில் கொண்டு சேர்க்கும்பொழுது ஆகாயத்திலிருந்து வெடிகுண்டுகளும், யந்திர பீரங்கிகளிலிருந்து குண்டுகளும் சுற்றிலும் வந்து விழுந்தன.

யுத்த களத்தில் உள்ளவர்களிடம் மாத்திரம் தைரியம் தங்கிவிடவில்லை. ஒவ்வொரு வீடும், வயலும், தோட்டமும் யுத்த களமாக இருந்தது. ஒவ்வொரு மனிதனும் முன்னணி வீரனுக இருந்தான்.

இம்மாதிரி பொதுமக்கள் படையைச்சேர்ந்த மனிதர்களுக்கு தைரியம்தான் ஆயுதம். ஜாதி, நிறம், மதம் என்ற வித்தியாசமே கிடையாது. சொந்த ஊரில் பொது ஜனங்கள் தைரியமாக இருப்பதைப் பார்க்க போர்களத்தில் சிப்பாய்கள் தைரியத்துடன் போர் செய்தார்கள்.

இதன் பயன் யாவரும் அறிந்ததே. ஸ்பிட்பைர் ஹரிகேன் விமானங்கள், கர்வங்கொண்டிருந்த லுப்ட் வாபியைத் துரத்தி அடித்தன. இங்கிலாந்தை படையெடுக்க சைனியங்களை ஏற்றிவந்த படகுகள் சமுத்திரத்தில் அமுக்கப் பட்டன. ஹிட்லரின் எண்ணங்கள் யாவும் பாழாயின.

இந்த வெற்றி யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்களினால் மட்டில் அடைந்த தல்ல. தன் குடும்பத்தையும் வீட்டையும் பாதுகாக்க திடசித்தத்துடன் சாதாரண மனிதன் நிலைத்து நின்றதாலும், அல்லது இந்த நோக்கங்களுக்காக இறந்ததினாலும் இந்த வெற்றி கிடைத்தது.

## Mrs. "ட்ரெவீக்ஸின் மனைவியின் மனோகதி".

ஒரு கொரேமான தாக்குதலுக்குப் பிறகு பலஹீனமான, வயது முதிர்ந்த கிழவி சொன்ன வார்த்தைகளை இந்த வியாசத்தில் காணவேண்டியது. அத்தியாவசியம்.

ராம்ஸ்கேட்டில் காத்தடித்தால் பறக்கக்கூடிய அவ்வளவு பலஹீனமானவர்களில் Mrs. F. H. ட்ரெவீக்ஸ் என்பவள் ஒருவள். சமீப காலத்தில்தான் அவள் நோயிலிருந்து குணமடைந்தாள். அவள் பாதுகாப்பான இடத்திற்குப் போயிருப்பாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அப்படியல்ல.

Mr. ட்ரெவீக்ஸ் என்பவர் தேசபாதுகாப்புப் படையில் வேலையிலிருந்தார். அவர் பெண்ணும் தேச சேவையில் ஈடுபட்டிருந்தாள். Mrs. ட்ரெவீக்ஸ் வேறு இடத்திற்குப் போய்விட்டால் அவள் தகப்பனாராவது, பெண்ணாவது குடும்ப வேலையைப் பார்க்கும்படி நேரிடும். அது காரணத்தினால் யுத்தப் பிரயத்தனத்திற்கு அவர்கள் செய்துவரும் வேலை சற்று குறைந்துவிடும். முதல் நாள் இரவு சுமார் 300 எரிகுண்டுகள் அந்தத் தெருவில் வீசப்பட்டன. மறுநாள் காலை ட்ரெவீக்ஸ் குடும்பத்தார்கள் சோர்வடைந்திருந்ததைக் கண்டதில் வியப்பேற்படாது.

## வேலை செய்ய வேண்டியது அவசியம்.

Mrs. டிரெவீக்ஸ் தாக்குதலைப்பற்றி எனக்குச் சொன்னதில் "பாதுகாப்பு அரணில் நீண்டகாலம் நீங்கள் தங்கியிருந்திருக்கவேண்டும்" என்றேன்.

"பாதுகாப்பு அரணா? ஒரு நாளுமில்லை. இரவு பூராவும் என் புருஷன் காவல் புரிந்தார். என் பெண்ணும் நானும் யார் அதிக எரி குண்டுகளை அணைக்கக்கூடுமென்று போட்டி போட்டோம். அநேக குண்டுகள் கூரைகளின்மேல் விழுந்தன. அவற்றை அணைக்க நாங்கள் கூரைகளின்மேல் ஏறவேண்டியிருந்தது. நான்தான் வெற்றியடைந்தேன். நான் 14 குண்டுகளை அணைத்தேன்; பிரேடா பத்து குண்டுகளைத்தான் அணைத்தாள்," என்று அவள் பெருமையாகப் பதில் சொன்னாள். ஆனால் "இந்த குண்டுகள் எல்லாம் உன்னை பயமுறுத்தவில்லையா?" என்று நான் கேட்டேன்.

"ஒரு காலத்தில் அப்படியிருந்தது, அதாவது பெரிய தாக்குதல்கள் ஏற்படுவதற்குமுன் அது அப்படியிருந்தது. வெடிகுண்டு தாக்குதல் ஏற்படப் போகிறது என்று எதிர்பார்ப்பதுதான் உண்மையில் நடந்த தாக்குதலைக்காட்டிலும் அதிக பயத்தைக் கொடுத்தது. ஒரு வெடிகுண்டு விழுந்தால் கொஞ்சதூரம்தான் அழியும். ஏதேனும் ஒரு இடத்தில் வெடிகுண்டு விழுவதும், அதே இடத்தில் நானிருப்பதும், அத்தகைய சதர்ப்பம் ஏற்படுவது வெகு துர்லபம் அல்லவா?" என்று சொன்னாள்.

## ஸோவியத் ஐக்கிய நாட்டிற்கு அனுப்பும் ஸப்ளைகள் வீணாக மாட்டா.

## மர்மான்ஸ்கிலிருந்து மாஸ்கோ வரையிலும் உள்ள இருப்புப் பாதையில் தோன்றும் காக்ஷிகள்.

## யுத்த தளவாடங்களை கையாளுவது ஒரு ஆச்சரியமான காக்ஷி.

(‘டெயிலி மெயில்’ பத்திரிகையின் விசேஷ நிருபர் நெக்லேபார்ஸன் எழுதியது).

நேசதேசத்தார்கள் வசம் உபரியாக இருக்கும் டாங்கிகள், பீரங்கிகள், விமானங்கள் இவைகளை ருஷ்யர்களுக்குக் கொடுத்து உதவவேண்டும். அவைகளைக் கொண்டு செஞ்சேனை தன் சக்திக்குத் தகுந்தவாறு மிகவும் சாமர்த்தியமாகவும், தீவிரமாகவும் உபயோகப்படுத்திக்கொள்ளும்.

ஸோவியத் ருஷ்யாவில் நேராடி சில மாதங்கள் வரை நான் பார்த்த விஷயங்களிலிருந்து மேலே குறிப்பிட்டபடி அபிப்பிராயப் பட்டேன். ருஷ்யர்கள் கடைசிவரை சண்டையிட எண்ணியிருக்கிறார்கள். அதனால் நாம் அவர்களுக்கு அனுப்பும் யுத்த சாமான்கள் ஒன்றையும் வீணாக்கமாட்டார்கள்.

மாஸ்கோவிலிருந்து இங்கு வரும்பொழுது மர்மான்ஸ்க்குக்கு வருவதற்குள் 10-நாட்கள் பிடித்தன. ஒன்றிரண்டு நாட்களில் ரயில்வண்டி 50 மைல்களுக்கு மேல் செல்லவில்லை. நாங்கள் வண்டிகள் மாறுவதற்காக அதிக காலத்தை வீணாகச் செலவழிக்க வேண்டியதாயிற்று. கப்பலில் பிரயாணஞ் செய்ய அதைப்பிடிக்க முயன்றதில் இடையில் ஏற்பட்ட காலதாமதம் மிகவும் கோபத்தை உண்டாக்க கூடியதாக இருந்தது.

ஆர்க்டிக் சமுத்திரம் வழியாக ருஷ்யாவிற்கு துணைக் கப்பல்கள் உதவியைக் கொண்டு வண்டி, வண்டியாக வந்திருக்கும் யுத்தப் பொருள்களை ரயில் வண்டிகளில் ஏற்றி வந்ததினால், நான் ஏறிவந்த வண்டியில் ருஷ்யப்படை வீரர்களும் கப்பற்படை வீரர்களும் இருந்தபோதிலும் அதைப் பொருட் படுத்தாமல் நாங்கள் வந்த வண்டிகளைக் காக்கப்போட்டு விட்டார்கள்.

ஆகாய விமானங்களை பெட்டிகளில் அடைத்தும், டாங்கிகளை கித்தான்களில் சுற்றியும், அவற்றை செய்தவர்கள் பிரிடிஷ்காரர்கள், அமெரிக்கர்கள் என்று காட்ட அவர்கள் பெயர்களை பெட்டிகளில் வரைந்தும் அவைகளை ஏற்றி வண்டி, வண்டியாக வந்த காக்ஷி மிகவும் பயங்கரமாகயிருந்தது.

மாஸ்கோவிற்கும், மர்மான்ஸ்கிற்கும் இடையிலுள்ள ஒரு ஜங்கிஷனில் இரண்டு நாட்கள்வரை தங்கவேண்டியிருந்தது. ஏனென்றால் சாமான் வண்டிகள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வந்துகொண்டிருந்தன. அவைகளிலிருந்த சாமான்களை கீழே இறக்குவதற்கு ஏராளமான ருஷ்யர்கள் அங்கு வந்திருந்தார்கள். அவர்கள் தன் முழுபலத்தையும் உபயோகித்து சாமான்களை இறக்கினார்களே தவிர வேறு யந்திர சாதனங்கள் ஒன்றும் அவர்களிடமில்லை. இருப்புப் பாதைகளில் நிற்கும் வண்டிகளை ஒன்றோடொன்று சேர்ப்பதற்குகூட கைகளினாலே தள்ளி சேர்த்தார்கள். பிரிடனும், அமெரிக்காவும் ருஷ்யாவுக்கு அனுப்பும் ஸப்ளைகளைக் கண்டு ருஷ்யர்கள் வெகு ஆவலாக நடந்துகொண்டது மிகவும் உன்னதமான காக்ஷி.

மர்மான்ஸ்க்கில் கப்பல்துறை பிராந்தியம் மிகவும் அடசலாக இருந்தது. கடுமையான ஆகாய விமானத் தாக்குதல் ஏற்பட்டபொழுதும்கூட பண்டகசாலைகளுக்குப் பாதுகாப்பு வேலையிலிருந்த பெண் காப்பாளர்கள்கூட அவர்கள் ஸ்தானத்தைவிட்டு நகரவில்லை. அங்குமிக்க பரபரப்பாக வேலை நடக்கிறது. யுத்த தளவாடங்களைக் கைப்பற்றி போர்க்களத்திற்கு கொண்டு போவதற்கு தடையாக இருக்கும்படி ருஷ்யர்கள் ஒன்றையும் அங்கு ஒன்றையும் விடமாட்டார்கள்.

ஒரு துணைக் கப்பலில் ஏறி ருஷ்யாவிற்குச் சென்றேன். அக்கப்பலில் ஏராளமான டாங்கிகளும், விமானங்களும் ஏற்றப்பட்டிருந்தன. அவைகள் துறைமுகத்திற்கு வந்ததும், ஏராளமாக ருஷ்ய வேலையாட்கள் அங்கு வந்து கூடினார்கள். அங்கு நடந்த நடவடிக்கையைப் பார்க்க ருஷ்யர்களின் பரபரப்பு சொல்லமுடியாது. இந்த சாமான்கள் வந்து சேர்ந்ததில் ருஷ்யர்கள் கொண்ட திருப்தியைப் பார்த்தவுடன் சாமான்கள் ஏற்றிச் சென்ற கப்பல்களுக்கு அபாயங்கள் நேரிட்டாலும் அவை பாராட்டதக்கதென்றே தோன்றிற்று.

இது முக்கியமான விஷயம். ஸப்ளைகளை ருஷ்யாவிற்கு கொண்டு செல்வது சிற்றுண்டியருந்துவதுபோல் அவ்வளவு சுலபமல்ல. அதில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு அதன் சிரமம் தெரியும். ஆனால் ஒரு தடவை ருஷ்யாவுக்கு ஸப்ளை கொண்டுபோனவர், மறுபடியும் ருஷ்யாவுச்குப் போக வெகு ஆவலாக இருப்பார்கள். இம்மாதிரி பிரிடிஷ் கப்பலாளிகள் சாமான்களைக்கொண்டு செல்வது பிரிடிஷ்-ருஷ்ய ஐக்கிய பத்தியத்தில் வெகு நேர்த்தியான அம்ஸம்.

---

# ஜெர்மனிக்குப் பொருளாதாரத் தேவைகளும், விஷி அரசாங்கத்தின் மாறுதல்களும்.

# லவால் உணவுப் பொருள்கள் கொடுக்கிறவனாகவும் போலீஸ்காரனாகவும் இருக்கிறான்.

# ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவின் பொருளாதாரம்.

(டோனல்ட் டேர்மான் பி. பி. ஸி. யில் சமீபத்தில் பேசியது).

ஜெர்மனியில் ராணுவத் தேவைக்காகவும், நேசதேசத்தார்கள் பிரான்ஸைச் சேர்ந்த நாடுகளைத் தாக்கினால் அவைகளின் தற்காப்புக்காகவும், பிரெஞ்சுக் கப்பற் படையின் உதவிக்காகவும் பிரான்ஸில் மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அதேமாதிரி பொருளாதாரத்திலும், கைத்தொழிலிலும், விவசாயத்திலும் ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள ஐரோப்பாவில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நேசதேசத்தார்களால் வெளியிலிருந்து பொருள்கள் வராமல் முற்றுகை போடப்பட்டு இருக்கிறது. உள்நாட்டிலிருந்து பொருள்களையெல்லாம் யுத்தத்திற்காக ஜெர்மானியர் எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

ஆகையால் ஐரோப்பா பூராவிலும் பொருளாதாரம் மிகவும் குறைவு. தொழிலாளிகள், பொருள்கள், யந்திரம், நிலக்கரி, எண்ணெய் போக்குவரத்து சாதனங்கள், உணவுப்பொருள்கள் இவையெல்லாம் ஜெர்மனியுள்பட எல்லா நாடுகளுக்கும் தேவையாகயிருக்கிறது. ஜெர்மனிக்குத்தான் இவை அதிகம் தேவையாகயிருக்கிறது ருஷ்ய யுத்தத்தில் ஏற்பட்ட ஏராளமான செலவு ஐரோப்பாவிலுள்ள இருப்பைக் குறைத்தும், ஐரோப்பா கண்டத்து நாடுகள் உபகரணமாக சாமான்கள் செய்வதைத் தடுததும், ஜெர்மனி போட்ட திட்டத்தைக் குலைத்தும் விட்டது.

யுத்தப் பொருள்கள் செய்வதற்கு பெருத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த வசந்த காலத் தாக்குதலில் உபயோகிக்க அவற்றின் பெரும்பான்மை தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதன் பயனாக வருஷத்திற்கு வேண்டிய மற்ற பொருள்கள் போதாது.

## ஜெர்மனியின் தேவை.

இப்பொழுது ஜெர்மனியில் தொழிலாளிகள் குறைவு என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். கிழக்குப் போர்முனையிலிருந்த ஜெர்மன் படைகள் பலாத்காரமாகச் சேகரிககப்பட்டவர்கள். அவர்களை ஜெர்மனியின் நேசதேசத்தார்கள்

என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அயல்நாட்டு யுத்தக் கைதிகளைக்கொண்டு ஜெர்மன் தொழிற்சாலைகளிலும், விவசாய இலாகாக்களிலும் வேலைக்குச் சேர்க்க வேண்டியிருக்கிறது. மற்ற நாடுகளிலிருந்து மாற்றுப்பொருள்களும், கீழ்தரமான உலோகங்களும் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் தொழிலாளிகளில் நிலக்கரியும், கரியும் ஏராளமாகச் செலவாகிறது. சேகரித்து வைக்கப்பட்டிருந்த விளைவு பொருள்களும், உணவுப் பொருள்களும் பெரும்பாலும் செலவாகிவிட்டது. இவ்விதக் குறைவை ஈடுசெய்வதற்கு ஜெர்மனி மற்ற நாடுகளை நம்பி யிருக்கிறது. ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகளும், பிரான்ஸும் ஜெர்மனியைக் காட்டிலும் இன்னும் கேடான நிலைமையில் இருக்கின்றன.

உணவுப்பொருள் ஒரு உதாரணம். ஜெர்மனியில் இப்பொழுது தயாரிக்கப் படும் உணவு ஜெர்மனியாருக்குத்தான் போதும். ஐரோப்பாவிலுள்ள மற்ற இடங்களில் விவசாயத்திற்கு உரம், யந்திரம் முதலியவைகளை ஸப்ளை செய்ய ஜெர்மனியால் முடியவில்லை. யந்திரம் ஓட்டுவதற்குத் தேவையான எண்ணெயும், மசகெண்ணெயும் கிடைக்கவில்லை. ஜெர்மனிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு உணவுப் பொருள்கள் கொண்டுபோவதற்கு போக்குவரத்து சாதனங்களும் இல்லை.

இதைக் காட்டிலும் ஜெர்மனியில் தொழிலாளிகள் மிகவும் குறைவு. அதனால் அவர்கள் மற்ற இடங்களிலிருந்து சேகரிக்கப்படுகிறார்கள். ஜெர்மனியிலுள்ள யுத்தக் கைதிகளும், அயல் நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கிற வேலைக் காரர்களும் சேர்ந்து ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசங்களிலுள்ள விவசாயத் தொழிலாளிகளை அதிகரிக்கச் செய்திருக்கிறார்கள்.

## மாறுதலடைந்த நிலைமை.

பிரான்ஸில் விளைபொருள்களும், எண்ணெயும், போக்குவரத்து சாதனங் களும் குறைவு. ஜெர்மானியர்கள் அதிகம் கேட்பதிலிருந்து பிரான்ஸின் நிலைமை மிகவும் கெட்டுப்போயிருக்கிறது. மேற்கு ஐரோப்பாவில் இருக்கும் பெருத்த கைத்தொழில் ஜெர்மானியரின் ஆதிக்கத்திலிருக்கிறது. இரும்பு, எஃகு, நிலக்கரி, பெட்ரோல் எண்ணெய் இன்னும் இறக்குமதி செய்யப்பட்டு இருப்பிலிருக்கும் விளைவு பொருள்களையும் வைத்துக்கொண்டு அவர்கள் அளந்து கொடுக்கிறார்கள்.

பிரான்ஸின் நிலைமை மோசமாக இருக்கிறது. சாதாரண காலங்களில் இரும்பு, எஃகு கைத்தொழிலுக்கு அதிகமாக உபயோகப்படுத்த பிரான்ஸில் போதுமான இரும்பு உலோகம் இருக்கிறது. பிரான்ஸ் எப்பொழுதும் துருப் பிடித்தவைகளை ஏற்றுமதி செய்வது வழக்கம். ஆனால் இப்பொழுது அதன் நிலைமை மாறியிருக்கிறது. பிரான்ஸிலுள்ள பெரிய கைத்தொழில்கள் எல்லாம் ஜெர்மானியரால் ஆக்கிரமிக்கப்பட்ட பாகங்களில் இருக்கின்றன. அங்குள்ள தொழிற்சாலைகள் ஜெர்மானியருக்காக வேலை செய்கின்றன. ஜெர்மானியர் பொது வாக எல்லாப் பொருள்களிலும் முதலில் பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸிலுள்ளவர்களுக்கும், கொஞ்சம், கொஞ்சம்தான் கொடுக்கப்படுகிறது.

நிலக்கரி ஸப்ளை விஷயமாக நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. யுத்தத் திற்கு முன் பிரான்ஸுக்குத் தேவையான நிலக்கரியில் மூன்றில் ஒரு பாகம் முக்கியமாக பிரிடனிலிருந்து இறக்குமதி செய்து வந்திருக்கிறது. இப்பொழுது அது கிடையாது. பிரான்ஸிலுள்ள நிலக்கரியில் மூன்றில் இரண்டு பாகம், ஆக்கிரமிக்கப்பட்ட பிரெஞ்சு நாடுகளிலும், ஆறில் ஒரு பாகம், ஜெர்மனிக்குத் திரும்பப் போய்ச் சேர்ந்திருக்கும் லோரைனிலும் இருக்கிறது. இது காரணத்தால் பிரான்ஸில் கிடைக்கக்கூடிய நிலக்கரியில் பெரும்பாகம் ஜெர்மானியரின் தேவைக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. ஜெர்மனியின் தேவையோ வரவர அதிகரித்து வருகிறது. பிரெஞ்சுத் தொழிற்சாலைகளுக்கு ஜெர்மானியர் நிலக்கரி அனுப்புவதாக உறுதி சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கொஞ்சம் அனுப்பியும் வருகிறார்கள். ஆனால் அவையெல்லாம் ஜெர்மனியின் வேண்டுகோளின்படி யுத்தப்பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

## போக்குவரத்தில் கஷ்டங்கள்.

பிரான்ஸில் நிலக்கரியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோய்க் கொடுப்பது சுலபமல்ல. தங்கள் தேவைக்காக ஜெர்மானியர் அங்குள்ள ரயில் வண்டிகளின் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுபோய்விட்டார்கள். ரயில் வண்டிகளுக்கு நிலக்கரி போதவில்லை. ரஸ்தா போக்குவரத்துக்கு பெட்ரோலும், எண்ணெயுமில்லை. மிகவும் குறைவான பெட்ரோலையும், எண்ணெயும் வைத்துக்கொண்டு ஜெர்மனி சமாளித்துவருவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று என்னவென்றால், ஜெர்மனியின் தேவைக்கு அல்லாத மற்ற விஷயங்களுக்கு ஐரோப்பா பூராவிலும் பெட்ரோலும், எண்ணெயும் மிகக்கொஞ்சமாகத் திட்டப்படுத்தப்பட்டிருக்கிறது.

உற்பத்திப் பொருள்கள், நிலக்கரி, பெட்ரோல், மசகெண்ணெய் இவைகளில் குறைவு ஏற்பட்டதினால் பிரெஞ்சுக் கைத்தொழிலும், விவசாயமும் பிரயோஜனமில்லாமல் போகின்றன. சாமான் உற்பத்தியும் குறைந்து வருகிறது.

பிரான்ஸில் சுரங்கத்திலிருந்து நிலக்கரி வெட்டுவதற்கு வேண்டிய சாதனங்களை பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மானியரிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். அவர்களில் சுரங்க வேலைக்காரர்கள் குறைவு. பிரெஞ்சு சுரங்கத்தில் வேலைசெய்த போலந்துக்காரர்களும், அயல்நாட்டுத் தொழிலாளிகளும் போய்விட்டார்கள். பிரான்ஸில் தேர்ச்சிபெற்ற சுரங்க வேலைக்காரர்களில் அநேகம் பேர்கள் யுத்தக் கைதிகளாக இருந்து ஜெர்மன் நிலக்கரி சுரங்கங்களில் வேலை செய்கிறார்கள். பிரெஞ்சு நிலக்கரி சுரங்கங்களில் வேலை செய்கிறவர்களுக்கு உணவு குறைந்துவிட்டதால் அவர்களின் வேலைத்திறமையும் குறைந்துவிட்டது.

## நிலைமை கேடடைந்து வருகிறது.

வேலை நிறுத்தமும், அதிருப்தியும் அங்கு ஏற்பட்டிருக்கிறது. கடினமான வேலைக்குக் குறைந்த உணவும், நிலக்கரி, பெட்ரோல் குறைவும் பொருத்தமானதல்ல. ஆகையினால் ஜெர்மனியின் பிரச்னைகள் அதிகரிக்க, அதிகரிக்க, பிரான்ஸின் நிலைமை கேடடைந்து வருகிறது. விளைவுபொருள்களும், நிலக்கரியும், எண்ணெயுமில்லாததினால் பிரான்ஸிலுள்ள தொழிற்சாலைகள் மூடப்பட்டு அங்குள்ள வேலைக்காரர்கள் ஜெர்மனிக்கு அனுப்பப்படுகிறார்கள்.

மத்தியதரைக்கடல் மார்க்கமாக உணவும், விளைவுபொருள்களும் கொண்டுவருவதற்குப் போதுமான கப்பல்களில்லை. முதலில் உணவுதான் அத்தியாவசியம். பிரான்ஸில் விவசாயமும், விவசாயிகளும், குதிரைகளும், யந்திரங்களும் குறைந்துபோய்விட்டதால், உணவுப் பொருள்கள் வெளியூரிலிருந்து வருவது அவசியமாக இருக்கிறது. கடல் மார்க்கமாக வரும் விளைபொருள்களும், ஜெர்மனிக்காவது, ஜெர்மனிக்காக வேலை செய்யும் பிரெஞ்சுத் தொழிற்சாலைகளுக்காவது போய்ச்சேருகின்றன.

லவால் அதிகாரத்திற்கு வந்ததற்கு இதுதான் காரணம். ஏதாவது ஒரு வழியில் அவன் நிர்ப்பந்தம் செய்து ஜெர்மனிக்குப் பொருள்கள் கொடுக்கவேண்டியது. பிரெஞ்சுக்காரர்களும் அதற்குச் சம்மதித்திருக்கும்படி செய்யவேண்டியதும் அவன் வேலை. அதனால்தான் அவனை உணவுப்பொருள் ஸப்ளை செய்கிறவனென்றும், போலீஸ்காரனென்றும் சொல்லுகிறார்கள்.

---

# பவளக்கடல் சண்டையின் சில முக்கிய அம்சங்கள். விமானப்படை அதிகம் உதவிற்று.

(*H. C.* பெர்ராபி எழுதியது).

பவளக்கடல் சண்டையைப் பற்றிய தகவல்கள் கிடைப்பதற்குக் கொஞ்ச காலம் பிடித்துவிட்டது. கம்பியில்லாத் தந்தி முதலிய வசதியிருக்கும் இந் நாளில் தகவல்களை உடனே அரசாங்கத்தார் தெரியப்படுத்தாததால் ஏதோ பாதகமாக இருப்பதால் தான் இவ்விதம் தாமதப்படுத்துகிறார்களென்று பொது ஜனங்கள் சந்தேகிக்கலாம்.

ஆனால் ராணுவ தந்திரத்தை முன்னிட்டேதான் வெகுகாலம் மௌனம் சாதிக்கப்பட்டது. அங்கே நேசநாட்டு கப்பற்படைக்கும், ஜப்பானிய கப்பற் படைக்கும் சண்டை நடந்தது. இரு நாடுகளும் ஆரம்பகாலத்தில் ஒன்றிரண்டு அறிக்கைகளை வெளியிட்ட பிறகு இரு நாடுகளும் சும்மா இருந்து விட்டன.

எதிரிக்குத் தங்களுடைய நோக்கங்களும் நடமாட்டங்களும் தெரியாமல் இருக்கவேண்டுமென்று இரு கக்ஷியினரும் அவ்விதம் செய்தனர். ஆகவே பவளக் கடல் சண்டையென்பது ரிவர் பிளேட் சண்டையைப் போலவோ, மடபன் சண்டையைப்போலவோ ஒரு சிறு சம்பவமல்ல. ஆனால் வெகுநாள் நடந்த பெரிய யுத்தமென்றே நினைக்கலாம்.

அதனால்தான் இன்னும் அதைப்பற்றினப் பூராத் தகவல்களைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. இருந்தாலும் கிடைத்துள்ள சில தகவல்களைப் பரிசீலனை செய்து பார்ப்போம்.

## புதிய அம்சம்.

முதலாவதாக நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், மே மாதம் ஆரம்பமான பிறகு விமானங்களில் காவல் செய்யும்போது, ஸாலமன் தீவுகளுக்கு அருகில் ஜப்பானியக் கப்பல்கள் சேமிக்கப்படும் விஷயம் புலப்பட்டது. நமது விமானப்படையின் சக்தியால்தான் இவ்விஷயம் நமக்குத் தெரிந்தது. இல்லாவிட்டால் கடற்படையின் ரகசிய நடமாட்டங்களை எளிதில் கண்டுகொள்ள முடியாது.

தற்காலத்தில் யுத்தக் கப்பல்களையும், போக்கு வரத்துக் கப்பல்களையும் 500 மைல் தூரத்திற்கு அப்பால் வைத்துக் கொள்ளலாம். ஆனால் முற்காலத்தில் 20 மைல் தூரத்தில்தான் வைத்துக்கொள்ள முடியும். ஆகவே கடற்படைக்கு விமான உதவியிருப்பது ஒரு முக்கிய சாதகம்.

மெடகாஸ்கருக்கு அனுப்பப்பட்ட பிரிடிஷ் கடற்படையும் விமானப்படை யும், எட்டு வாரகாலம் சஞ்சாரத்திலேயே இருந்தும் கொஞ்சமும் சேதப்படாமல் சென்றதற்குக் காரணமும் இதுதான்.

அடுத்த விஷயம் என்னவென்றால் ஜப்பானியக் கப்பற்படை நகர்ந்து செல்ல ஆரம்பித்துவிட்டால் பிரிடிஷ் விமானங்களால் சுலபமாகவே டார்பிடோ செய்து அமுக்கப்படும். உதாரணமாக மே மாதம் 4ௗ வெளிவந்த அமெரிக்கக் கப்பல் இலாகா அறிக்கையின்படி அன்று பூரா நேசநாட்டுத் தாக்குதல் விமானத்தில் இருந்ததுதானென்று தெரிகிறது. வேறு கப்பல் சண்டை முதலியவை ஒன்றும் குறிக்கப்படவில்லை. விமானம் ஏற்றும் மூன்று கப்பல்களின் நஷ்டம் சொல்லப் பட்டிருந்தது.

அடுத்து இரண்டு நாட்களில் ஒரு சண்டையும் நேரவில்லை. ஆஸ்திரேலியா விலுள்ள நேசதேசக் கப்பற்படையும், மேமீ 4ௗயே ஈடுபட்டிருந்தால் ஜப்பானியக் கப்பற்படை உடனேயே தோற்கடிக்கப்பட்டிருக்கும். அச்சண்டை களுக்கிடையில் அவ்வளவு தாமதமும் நேர்ந்திருக்காது.

### ஜப்பானியரின் கூற்று மறுக்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பங்களில் ஜப்பானியர் பிரமாதமாக வெற்றியடைந்து விட்டதாகச் சொல்லிக்கொண்டனர். ஆனல் அதை ஒருவரும் நம்பவில்லை. ஏனென்றல் வாஸ் ஸ்பைட் வகையைச் சேர்ந்த பிரிடிஷ் யுத்தக் கப்பல் ஒன்றை அமுக்கி விட்டதாக டோகியோவில் சொன்னது பொய்யென்று லண்டன் அதிகாரிகள் சொல்லிவிட்டனர்.

இவ்விதம் நடந்தது முதல் சண்டையைப் பற்றி தெரியப்படுத்திய அறிக்கைகளில் ஒரு வார்த்தைதான குறிப்பாக இருந்தது. ஜெனரல் மெக் ஆர்தரின் தலைமை ஸ்தானத்திலிருந்து கிடைத்த செய்திகளிலும் அது காணப்பட்டது. அதாவது எதிரி "திருப்பியடிக்கப்பட்டான்" என்றிருந்தது. அடுத்தபடி இரண்டு நாட்கள்வரை ஜப்பானியர் வேறு லக்ஷியங்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தாலும் அன்று நடந்த சண்டையில் ஜப்பானியர் திருப்பியடிக்கப்பட்டனர் என்று தெரிந்துகொள்ளலாம்.

### வெகுதூரம் கலைக்கப்பட்டன.

கொஞ்ச நாள் கிரமித்து விஷயங்கள் வெளிப்பட்டதும் ஜப்பானியக் கப்பல்கள் வெகுதூரம் கலைந்து ஓடிவிட்டன என்று தெரிகிறது. ஆகவே அந்த சந்தர்ப்பங்களில் அமெரிக்கக் கப்பற்படையினர் பல சிறு சண்டைகளையும் செய்திருப்பார்கள்.

இவைகளைப் பற்றிய தகவல்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கிடைக்கும். அல்லது ஜப்பானியருக்கு உண்மை தெரியாமலிருப்பதற்காக மௌனமாகவும் இருக்கலாம்.

ஏற்கனவே சொல்லியபடி விமானப் படையை உபயோகித்ததுதான் இதில் முக்கியம். விமானப்படை அதிகமாக ஈடுபட்டு நடந்த கடல் சண்டைகளில் இதுவே முதலாவதாகும்.

---

## மூவகைப் படையின் யுத்தத்தின் பயன்.

## பொருளாதார முற்றுகையினல்தான் வெற்றிகிடைக்கும்.

(மேஜர் ஜெனரல், ஸர். சார்லஸ் க்வின் என்பவர் லண்டனிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி.)

போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்பட்டிருப்பதினலும், மாரிகாலப் போரினல் ஜெர்மன் துருப்புகள் களைப்படைந்திருப்பதினலும், ஜெர்மானியர் எதிர்பார்த்தபடி சீக்கிரத்தில் வசந்த காலத் தாக்குதலை ஆரம்பிக்கமுடியாது என்று சொல்லப்படுகிறது. ஜெர்மன் அரசாங்க சபையில் ஹிட்லர் பேசியதிலிருந்து அவன் நினைத்தபடி திட்டங்கள் நடைபெறவில்லையென்று தெரிகிறது.

ருஷ்ய ஆகாய விமானப்படை பலம் வரவர அதிகரித்து வருவது ஹிட்லருக்குக் கலக்கத்தை உண்டாக்கியிருக்கவேண்டும். மேலும் பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதல்கள் இப்பொழுது கடுமையாக இருப்பதால் ஜெர்மன் லுப்ட்வாபியின் பெரும் பாகத்தை மேற்குப் பிராந்தியத்தில் தற்காப்பு வேலைக்காகவும், திருப்பித் தாக்குவதற்காகவும் வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. இப்பொழுதும் ஒரு போதுமில்லாதபடி ஆகாயச் சண்டையில் கிழக்கிலும், மேற்கிலும் இரண்டு போர் முனைகளிலும் அவன் யுத்தம் புரியவேண்டியிருக்கிறது.

## ஆகாய யுத்தம் மட்டில் போராது.

பிரிடிஷ் விமானப் படையின் தாக்குதல்கள் வெற்றிகரமாகத் தோன்றினாலும் ஆகாய விமானச் சண்டையின் மூலம் முடிவான பயன் கிடைக்கமாட்டாது. விமானத் தாக்குதல்களை அதிகப்படுத்துவதினால் ஜெர்மானியருக்குக் கடற் சண்டை, ஆகாயச் சண்டை, தரைச் சண்டை இவைகளை ஒத்து நடத்துவதில் பொருளாதார நெருக்கடி ஏற்படும்படி செய்வதைக் காண்கிறோம். அது நீண்ட கால யுத்தம். இருதிரப்பார்களுக்கும் மனித பலமும், பொருள் இருப்பும் அதிகம் இருப்பதால் யுத்தம் நீடித்து நடக்கும். அதில் எந்தக் கக்ஷிக்கு பொருளாதாரக் குறைவு ஏற்படுகிறதோ அக்கக்ஷியின் தோல்விக்கு வழி ஏற்படும்.

யுத்தம் ஆரம்பித்தபொழுது ஜெர்மனியின் நிலைமை மிகவும் உன்னதமாக இருந்தது. அதாவது ஜெர்மனியில் ஏராளமாகப் பொருள்கள் இருந்தன. அந்நிய நாடுகளிலிருந்தும் ஏராளமாகப் பொருளகள் வந்துகொண்டிருந்தன. உள்நாட்டிலிருந்தும் ஏராளமாகப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு ஸப்ளைகள் இருந்துவந்தன. பொருளாதார முற்றுகையினால் அயல் நாட்டிலிருந்து வரக்கூடிய பொருள்கள் தான் தடைபட்டன.

ஆகாய விமானத்தாக்குதல்கள் உள்நாட்டிலுள்ள பொருள்களையாவது, உற்பத்தி செய்யும் சக்தியையாவது விசேஷமாகக் குறைக்கவில்லை. ஆனால் ஜெர்மனியின் படையெடுப்புகளின் ஆரம்பத்தில் தரைச் சண்டைக்குத் தேவையான யுத்தப் பொருள்களை ஏராளமாகச் செலவு செய்யும்படி நேரிடவில்லை. ஏனென்றால் அப்பொழுது அதற்குப் பலமான எதிரிகளுடன் சண்டை செய்ய அவசியம் நேரிடவில்லை. இப்பொழுது நேசதேசக் கப்பற்படை பலத்தினால் அயல் நாடுகளிலிருந்து பொருள்கள் ஜெர்மனிக்கு வருவதற்கு கொஞ்சம்கூட வழியில்லை. ஆகாய விமானப்படை பலம் தொழிற்சாலைகளுக்குச் சேதத்தை விளைவித்து உள்நாட்டிலிருக்கும் பொருள்களை உற்பத்தி செய்யவிடாமலும் ஜெர்மன் பொதுமக்களுக்கு உணற்சிக் குறைவும் உண்டாக்கிவருகிறது.

## ருஷ்யாவில் தரைச் சண்டை.

ருஷ்யாவில் நடக்கும் தரைச் சண்டையில்தான் ஜெர்மனியிலுள்ள இருப்புப் பொருள்கள் எல்லாம் துரிதமாக அழிந்து போகின்றன. நேசதேசத்தார்கள் வசமிருக்கும் மூவகைப் படைகளும் இப்பொழுது போர் நடத்திவருகின்றன. ஆதலால் இருப்புப் பொருள்களுக்கும், கைத்தொழிலுக்கும் நெருக்கடி உண்டாகி ஜெர்மனியின் பலம் குறைந்துகொண்டு வருகிறது. இந்த முறை முற்றிலும் சரியென்று சொல்லமுடியாது. ஆனால் இம்முறையினால் அநேகர்கள் எதிர்பார்ப்பதற்கு முன்னாடியே நிச்சயமான வெற்றி கிடைக்குமென்று தெரிகிறது.

இம்மூன்று வகைப் படைகளும் வெற்றிக்குக் காரணமாக இருந்தாலும் அவை மூன்றும் ஒன்று சேர்ந்து போர் நடத்தினால்தான் வெற்றிக்கு வழியுண்டாகும். ஆகாய விமானத் தாக்குதல்களை அதிகரிக்கச் செய்வது மெத்த அவசியம். இதனால் தான் ஹிட்லருக்குத் தன் பிரயத்தனங்கள் அனாவசியம் என்றும், பொருள்களை வீணாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறதென்றும் தெரிந்தபோதிலும், அம்மாதிரி நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியிருக்கிறது. எதிரிகள் பழிக்குப்பழி வாங்குவதில் நமக்கு உயிர்ச் சேதம் ஏற்படுவதையும், பல கட்டடங்கள் அழிவதையும் குறித்து நாம் துக்கப்படவேண்டியிருக்கிறது. இருந்தபோதிலும் இவைகளைத் தவிர்க்க முடியாது. தற்காப்பு முறையிலிருந்த நமக்கு, எதிரிகளை எதிர்த்துப் போராடுவதில் செலவு அதிகம் ஏற்படுகிறது. ஆனாலும் அவ்வித முயற்சியில் எதிரியின் படைப் பலத்தை பரவலாகப் பிரித்து வைக்கக்கூடும்.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 98—(5-வது பிரிவு).

| 1942— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஜுன் | ... 6, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 7, | ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் | ... ,, | 6.00 |
| | | | வம்பன் | ... ,, | 6.30 |
| | 8, | திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி | ... ,, | 6.00 |
| | | | தொலையானூர் | ... ,, | 6.30 |
| | 9, | செவ்வாய்க்கிழமை. | குளவாய்ப்பட்டி | ... ,, | 6.00 |
| | | | கீழையூர் (தெற்கு) | ... ,, | 6.30 |
| | 10, | புதன்கிழமை ... | வெள்ளனூர் | ... ,, | 6.00 |
| | | | செம்பாட்டூர் | ... ,, | 6.30 |
| | 11, | வியாழக்கிழமை ... | புலியூர் | ... ,, | 6.00 |
| | | | கண்ணங்குடி | ... ,, | 6.30 |
| | 12, | வெள்ளிக்கிழமை ... | பள்ளிவாசல் | ... ,, | 6.00 |
| | | | பில்லமங்கலம் | ... ,, | 6.30 |

## பிரஸங்கம் 99—(1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 14, | ஞாயிற்றுக்கிழமை. | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | | | பூவரசகுடி | ... ,, | 6.00 |
| | | | வேங்கடக்குளம் | ... ,, | 6.30 |
| | 15, | திங்கட்கிழமை ... | திருமயம் | ... ,, | 6.00 |
| | | | மேலூர் | ... ,, | 6.30 |
| | 16, | செவ்வாய்க்கிழமை | பெருங்களூர் | ... ,, | 6.00 |
| | | | ஆதனக்கோட்டை | ... ,, | 6.30 |
| | 17, | புதன்கிழமை ... | அரிமளம் | ... ,, | 6.00 |
| | | | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 6.30 |
| | 18, | வியாழக்கிழமை ... | உடையாளிப்பட்டி | ... ,, | 6.00 |
| | | | கிள்ளுகோட்டை | ... ,, | 6.30 |
| | 19, | வெள்ளிக்கிழமை ... | அம்புக்கோவில் | ... ,, | 6.00 |
| | | | ரெகுநாதபுரம் | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—8-6-42.